(உத்தியோகபூர்வமற்ற தமிழ் மொழிபெயர்ப்பு)

***மனித உரிமைகள் ஆணையத்தின் 16/21 தீர்மானத்துடன் இணைக்கப்பட்டுள்ள 5வது பந்திக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்ட தேசிய அறிக்கை***

**இலங்கை**

- ***அறிமுகம்***

***பின்னணி***

1. இலங்கையானது அண்மைக்காலத்தில் நாட்டில் மனித உரிமைகளின் முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்திய மிக முக்கியமான மாற்றமொன்றைக் கண்டுள்ளது. அத்துடன் 2015 ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து புதிய கூட்டு அரசாங்கமொன்று அமைக்கப்பட்டதனூடாக மேலுமொரு ஜனநாயக மாற்றம் இடம்பெற்றது. அதன் பின்னர் 2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலை தொடர்ந்து தற்போதைய அரசாங்கம் நிறுவப்பட்டுள்ளது.

2. 2015ல் இடம்பெற்ற தேர்தல்களின் பின்னர் தொடர்ந்து இடம்பெற்ற அரசியலமைப்பு மற்றும் நிருவாக மாற்றங்களுக்கூடாக இலங்கையில் மிகப்பெரியதொரு ஜனநாயக இடைவெளி தேற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளானது ஊடகச் சுதந்திரத்தை மீளக்கொண்டு வருவது மற்றும் முக்கிய பொது நிறுவனங்களின் சுயாதீனத்தன்மையினை மீளக்கொண்டுவந்த அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தினை கொண்டுவருதல் ஆகியவற்றை உள்ளடக்கும். இந்த புதிய அரசாங்கமானது சமாதானம் மற்றும் மீளிணக்கம் ஆகியவற்றில் காணப்பட்ட போருக்குப் பிந்திய சிக்கல்வாய்ந்த அரசியல் சவால்கள் உட்பட தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதில் ஒரு திடமான அர்ப்பணிப்பினை வெளிக்காட்டியது.

3. அனைத்துலக காலாந்தர மீளாய்வின் (*Universal Periodic Review*) மூன்றாவது சுற்றிலும் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை இலங்கை வரவேற்கிறது. 2012 இல் இலங்கையின் இரண்டாவது அனைத்துலக காலாந்தர மீளாய்வு இடம்பெற்றதிலிருந்து இலங்கையின் மனித உரிமைகள் மீதான பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு தொடர்பான முன்னேற்றங்கள் மற்றும் 2015 இல் உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கம் தொடர்பில் வெளிப்படுத்துவதை தற்போதைய அறிக்கை இலக்காகக் கொண்டுள்ளது. முறையே 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற முதலாவது மற்றும் இரண்டாவது UPRகளின் போது வழங்கப்பட்ட இலங்கைக்கான சிபாரிசுகளை அமுல்படுத்துவதை வெளிப்படுத்துவதாக இந்த அறிக்கை கட்டமைக்கப்பட்டுள்ளது.

***சனத்தொகைத் தரவு***

4. இலங்கையின் சனத்தொகையானது 2013 நடுப்பகுதியில் 20,483,000 ஆக காணப்பட்டது. இந்த சனத்தொகையின் பால்நிலைப் பரம்பலானது 51.5 வீதம் பெண்களும்ää 48.5 வீதம் ஆண்களும் என்பதாக காணப்படுகின்றது. பல்லின மற்றும் பல மதங்களைக் கொண்டதாகவும் இந்த சனத்தொகை பரம்பல் காணப்படுகின்றது. மொத்த சனத்தொகையில் 74.9 வீதமானவர்கள்

சிங்களவர்களாகவும், தமிழர்களும் சோனகர்களும் முறையே 11.2 வீதம், 9.3 வீதம் என்ற அடிப்படையில் காணப்படுகின்றது. பெருந்தோட்டத்துறையில் இருக்கின்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் சமூகம் மேலும் 4 வீதத்தினை இந்த சனத்தொகைப் பரம்பலில் பிரதிபலிக்கின்றது. இதேவேளை, மொத்த சனத்தொகையில் 70 வீதமானவர்கள் பௌத்தர்களாகவும் இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்த்தவர்கள் முறையே 12.6%, 9.7%, 7.6% ஆகவும் காணப்படுகின்றனர்.

5. தற்போதைய நிலையில் இலங்கையின் சனத்தொகை வளர்சி வீதம் 0.8 ஆக காணப்படுகின்றது. வயதுப் பரம்பலின் அடிப்படையில் இச் சனத்தொகையானது, 0 தொடக்கம் 14இற்கு இடைப்பட்ட வயதினர் 5.1 மில்லியனாக காணப்படுகின்றனர். 13.7 மில்லியன் சனத்தொகை 15 – 64 இற்கிடைப்பட்ட வயதுப் பிரிவில் காணப்படுகின்ற அதேவேளை 1.6 மில்லியன் பேர் 65 வயதை தாண்டியவர்களாகவும் காணப்படுகின்றனர். 2013ல் இலங்கையின் சனத்தொகை அடர்த்தியானது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 327 நபர்களாகும்.

6. இலங்கை உயர்தரத்திலான எழுத்தறிவு வீதத்தைக் கொண்டுள்ளது. இதன்படி 2012ல் இலங்கையின் சராசரி எழுத்தறிவு வீதம் 95.6 ஆகவும், இதில் ஆண்களின் எழுத்தறிவு வீதம் 96.8 ஆகவும் பெண்களின் எழுத்தறிவு வீதம் 94.6 ஆகவும் காணப்பட்டது. அதேவேளை, 2014இல் ஒட்டுமொத்தமாக இலங்கையின் ஆரம்பக் கல்வி மட்டமானது 99.7 வீதத்தை அடைந்துள்ளது.

7. இலங்கையின் சுகாதாரத்துறை புள்ளிவிபரங்களும் நம்பிக்கையூட்டக்கூடியதாக உள்ளது. பிறப்பின் போதான சராசரி ஆயுள் எதிர்பார்க்கையானது 75 வருடங்களாகக் காணப்படுகின்றது. மேலும், சிசு மரணவீதம் (2012இல் 1000 உயிர்ப்பிறப்புக்களுக்கு) பிறந்தவுடன் (ஒரு வயது வரை - neonatal), பச்சிளம் பருவம் (ஒன்று முதல் இரண்டு வயது - *infant*), மற்றும் ஐந்து வயதுக்கு கீழ்ப்பட்ட (2தொடக்கம் 5 வயது வரை) ஆகிய பிரிவுகளில் முறையே 6.8 வீதம், 9.2 வீதம் மற்றும் 10.4 வீதம் என்ற அடிப்படையில் காணப்படுகின்றது. 1990இல் (100,000 உயிர்ப்பிறப்புக்களுக்கு) 33ஆக காணப்பட்ட பிரசவ மரணங்கள் பின்னர் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளதுடன் 2010இல் அது 33 ஆக காணப்படுகின்றது.

## *II.* முறைமையும் ஆலோசனைகளும்

8. இந்த அறிக்கையினை தயாரிப்பதற்காக கடைப்பிடிக்கப்பட்ட முறைமையானது இரண்டு வகையானதாகும்: முதலாவது, தொடர்புடைய அரச முகவர்களை கூட்டி தகவல்கள் ஒன்று திரட்டப்பட்டது: இரண்டாவதாக, சிவில் சமுகத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகளையும் அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் கண்டறிவதற்காக அரச சார்பற்ற பங்குதாரர்கள் பொதுமக்கள் ஆகியோரிடம் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**தரவு சேகரிப்பு மற்றும் தொகுப்பாக்கம்**

9. முன்னைய இரண்டு சுற்று அனைத்துலக காலாந்தர மீளாய்வு கூட்டங்களிலும் (Universal periodical Review – Cycle) இலங்கை பெற்றுக்கொண்ட சிபாரிசுகளை அமுல்படுத்துகின்ற நிலைப்பாடு தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அலுவலர்களை உள்ளடக்கி அமைச்சுக்களுக்கிடையிலானதொரு செயற்குழு அமைக்கப்பட்டு தகவல்கள் தொகுக்கப்பட்டன. தகவல்களை ஒன்றுதிரட்டி அவை பற்றி தொடர்புடைய பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்துதல் என்ற முக்கிய விடயத்திற்கு ஐக்கிய நாடுகள் வெளிவிவகார அமைச்சுப் பிரிவில் United Nations (UN) Division of the Ministry of Foreign Affairs (MFA) உடன்பாடு எட்டப்பட்டது.

10. 2012ம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலக காலாந்தர மீளாய்வு கூட்டத்தொடரின்போது இலங்கை ஏற்றுக்கொண்டதும் இலங்கையினால் முன்வைக்கப்பட்டதுமான தன்னார்வ உறுதிமொழிகள் மற்றும் சிபாரிசுகளின் விடயத்தில் விஷேடமானதொரு கவனம் செலுத்தப்பட்டது. 2012இல் பெற்றுக்கொண்ட சிபாரிசுகளில் மீதமாகவுள்ளவற்றினை அமுல்படுத்துவது மற்றும் 2008இல் இடம்பெற்ற அனைத்துலக காலாந்தர மீளாய்வு சுற்றுக் கூட்டத்தொடரின் போது பெற்றுக்கொண்ட சிபாரிசுகள் மற்றும் வழங்கப்பட்ட தன்னார்வ உறுதிமொழிகள் போன்றவை தொடர்பான மேலதிக தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இந்த விடயத்தில் இரண்டு தகவல் மூலங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன:

*a.* முதலாவதாக, பொருத்தமான சிபாரிசுகளை அமுல்படுத்துவது தொடர்பாக சம்மந்தப்பட்ட வரிசை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சு மேற்கொண்ட கலந்துரையாடல்கள்.

*b*. இரண்டாவதாக, திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள அனைத்துலக காலாந்தர மீளாய்வு சுற்றின் சிபாரிசுகளின் அளவினை ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சு ஒரு மீளாய்வினை செய்தது. 2016ஆம் ஆண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்ட செயன்முறைக்கூடாக திட்டத்தின் பல்வேறு கருப்பொருள் தலைப்புக்களுடன் அனைத்துலக காலாந்தர மீளாய்வு (*UPR Cycle*) சுற்றின் சிபாரிசுகளை ஒருங்கிணைப்பதற்கென விஷேடமான அர்ப்பணிப்பொன்று இடம்பெற்றுள்ளது.

**தேசிய ஆலோசனைகள்**

11. இந்த அறிக்கையினை வடிவமைப்பதற்கான தேசிய ஆலோசனைகள் இரண்டு கட்டங்களாக இடம்பெற்றன: முதலாவதாக, இரண்டு அனைத்துலக காலாந்தர மீளாய்வு சுற்றுக்களினதும்(*UPR Cycle*) சிபாரிசாக கூட்டிணைக்கப்பட்டு திட்டமாக்கப்பட்டுள்ள தற்போது நடைமுறையிலுள்ள NHRAP தயாரிக்கப்பட்ட நடைமுறை ஆலோசனையின் முதற்கட்டமாக கருத்தில் கொள்ளப்பட்டது. இந்த நடைமுறை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது:

*a.* (இவ்வறிக்கையின்) தயாரிப்பு நடைமுறைகளுக்கு தேவையான பூரணமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக அரசாங்க இணைப்புக் குழுவொன்றும் (குடியியல்) சிவில் சமுக இணைப்புக் குழுவொன்றும் தாபிக்கப்பட்டது.

*b.* அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமுக செயற்பாட்டாளர்களை கொண்டு 10 பேர் கொண்ட வரைபுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்திற்கான முக்கிய கருத்திட்ட தலைப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

*c.* தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தில் (NHRAP) உள்ளடக்கப்பட வேண்டிய செயற்பாட்டு விடயங்கள் தொடர்பான பொதுமக்கள் சிபாரிசுகளை பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகப்பூர்வ இணையத்தளப் பக்கமொன்று ஏற்படுத்தப்பட்டது.

*d.* நாட்டில் நிலவும் மனித உரிமை நிலைமைகளுடன் தொடர்புபட்ட தங்களது அவதானிப்புகள், சிபாரிசுகள் மற்றும் செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் ஆகியவற்றை முன்வைப்பதற்காக, பொதுமக்கள் மற்றும் சிவில் சமுக உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு பகிரங்க ஆலோசனைகள் பெறப்பட்டன.

*e.* வரிசை அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் திணைக்களங்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐக்கிய நாட்டு முகவர்கள் மற்றும் பல்வேறு உயர்மட்ட மனித உரிமைகள் தொடர்பான விற்பன்னர்கள் ஆகியோரிடையே அவர்களின் பின்னூட்டலை பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக உத்தேச தேசிய மனித உரிமைகள் செயற்திட்ட வரைபு அனுப்பி வைக்கப்பட்டது. இதன்போது அமைச்சரவை அனுமதிக்கான சமர்ப்பிக்கும் போது பெறப்படும் பின்னூட்டல்கள் உத்தேச திட்டத்தினுள் உள்ளடக்கப்படும்.

12. அரசாங்க தரவுகளின் தொகுப்பு மற்றும் தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தின் ஆலாசனைகள் ஆகியவற்றுக்கூடாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாக கொண்டு உத்தேச தேசிய அறிக்கையொன்று (Draft National Report) தயாரிக்கப்பட்டது. அறிக்கையின் கட்டமைப்பு மற்றும் அதனை முன்னளிப்பு செய்தல் (Presentation) தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்காக இலங்கையை தளமாக கொண்ட மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலய (OHCHR)மனித உரிமைகள் தொடர்பான சிரேஸ்ட ஆலோகர் ஊடாக மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராயத்துடன் தொடர்புகொண்டு ஆலோசனைகள் பெறப்பட்டன.

**தேசிய அறிக்கையினை இறுதிப்படுத்தல்**

13. சகல தகவல்களும் சேகரிக்கப்பட்டு ஆலோசனைகளும் முடிவுறுத்தப்பட்டதும், 2011 ஜூலை 19 ம் திகதி 16/21 தீர்மானத்திற்கூடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை (UNHRC) இனால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கமைவாக தேசிய அறிக்கை தயாரிக்கப்பட்டது.

## *III.* சட்ட மற்றும் நிறுவன ரீதியான கட்டமைப்பு

### *A.* அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு

**அரசியலமைப்பு**

உலகளாவிய கால மீளாய்வு (*UPR*) செயற்குழு அறிக்கை 2008 இன் 93வது பந்தியில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகள்

14. இலங்கையானது அரசியலமைப்பின் ஏற்பாடுகள், உள்நாட்டு சட்டவாக்கம் மற்றும் முதன்மைச் சட்டங்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கும் சர்வதேச உடன்படிக்கைகளின் பிரகாரம் தேவைப்படுகின்ற கடப்பாடுகளையும் நிறைவேற்றவேண்டிய பொறுப்பிலுள்ள இரட்டைத்தன்மையுடைய ஒரு நாடாகும். நாட்டில் நிலவுகின்ற சட்ட மற்றும்

அரசியல்யாப்புசார் மற்றும் நீதி நிர்வாக நடவடிக்கைகளுக்கூடாக சர்வதேச உடன்படிக்கைகளில் ஒரு தரப்பாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

15. இலங்கையின் அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் தொடர்பாக தனியான அத்தியாயம் ஒன்றைக் கொண்டுள்ளது. இந்த அத்தியாயமானது ஏனையவைகளுடன் சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சியும் சமயமும், சித்திரவதையிலிருந்து விடுபட்டிருத்தல், சமத்துவமாகவும் பாகுபாடற்ற நிலையிலும் இருத்தல், ஒருதலைப்பட்சமாக கைதுசெய்யப்படுவதிலிருந்து விடுபட்டிருத்தல், தடுத்துவைத்து தண்டித்தல் மற்றும் பேச்சுச் சுதந்திரம், கூடிவாழ்தல், கூட்டாக இயங்குதல் ஆகியவற்றுக்கான உரிமைகள் உள்ளிட்ட விடயங்களை அதன் உள்ளடக்கமாக கொண்டுள்ளது. வாழ்வுக்கான உரிமையானது அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்தில் சந்தேகத்திற்கு இடமற்று தெளிவான முறையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் Sriyani Silva v. Iddamalgoda [2003] 2 Sri.L.R. 63 என்ற வழக்கின் தீர்ப்பில் வாழ்வுக்கான உரிமையானது அரசியலமைப்பில் மறைமுகமாக உள்ளடக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் உச்ச நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

16. தற்போது அரசியலமைப்பு மாற்றத்தின் ஒரு அங்கமாக உரிமைகள் தொடர்பான புதிய சட்ட மசோதாவொன்று கருத்தில் கொள்ளப்பட்டு வருகின்றது. அரசியலமைப்பு மாற்றத்திற்காக அடிப்படை உரிமைகள் தொடர்பான சிபாரிசுகளை அரசியலமைப்பு சபைக்கு முன்வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற உப குழு தனது இறுதி அறிக்கையினை ஏற்கனவே முன்வைத்துள்ளது. இந்த மசோதாவானது அத்தகைய பாகுபாடாக நடாத்தப்படுவதை தடைசெய்திருக்கின்ற மற்றுமொரு அடிப்படையினை உள்ளடக்கியிருப்பதனூடாக வாழ்க்கை மற்றும் தனிச்சிறப்பு ஆகியவற்றுக்கான உரிமையினை தெட்டத்தெளிவான முறையிலும் மற்றும் பாகுபாடற்றிருப்பதற்கான உரிமை மேம்படுத்தப்பட்ட நிலையிலான விடயங்களையும் அந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக, பாலியல் நோக்கு,பால்நிலை அடையாளம் மற்றும் மாற்றுத்திறன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**சித்திரவதைச் சட்டம் மற்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை.**

17. குறிப்பிடத்தக்க மனித உரிமை உடன்பாடுகள் சட்டவாக்கத்தினூடாக இலங்கையின் தேசிய சட்ட முறைமைக்குள் சேர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக, 1994ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதையும் ஏனைய கொடூரமான தண்டணைகள், மனிதத்தன்மையற்ற விதத்தில் அல்லது தரக்குறைவாக நடாத்துவதும், தண்டணை வழங்குவதும் ஆகியவற்றுக்கெதிரான சட்டம் (Convention Against Torture and other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment (CAT) Act, No. 22 of 1994) உள்நாட்டுச் சட்டத்தில் இணைக்கப்பட்டமையினை குறிப்பிடலாம். அதுமாத்திரமன்றி 2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சிவில் (குடியியல்) மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையானது (International Covenant on Civil and Political Rights (ICCPR)) ஏற்கனவே இலங்கையின் அரசியல் யாப்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்காத அதன் குறிப்பிடத்தக்க ஏற்பாடுகளை இணைத்துக்கொள்கின்றது. எடுத்துக்காட்டாக, குழந்தைகள் தொடர்பான சகல விவகாரங்களும் அவை பகிரங்க அல்லது தனியார் சமூக நலன்புரி நிறுவனங்களினாலோ அல்லது நீதிமன்றங்களினாலோ, அல்லது நிர்வாக துறையினராலோ, அல்லது சட்டவாக்க அமைப்புக்களினாலோ முன்னெடுக்கப்பட்ட போதிலும் பிள்ளை நலச்சிறப்பு கோட்பாடு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதன் மூலம் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR Act) பகுதி 5 (2)

*ஆனது இலங்கையின் தேசிய சட்டமுறைமைக்குள் உள்வாங்கப்பட்டதானது "பிள்ளை நலச் சிறப்பு" கோட்பாடு பற்றி நம்பிக்கையை கட்டியெழுப்புகின்றது.*

18. *இலங்கையிலுள்ள ஒவ்வொரு தனிநபருக்கும் தங்களது உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு மார்க்கங்கள் காணப்படுகின்றன. அரசின் நிறைவேற்றுத் துறை அல்லது நிர்வாகத்துறையினரால் நிகழ்த்தப்படுகின்ற அடிப்படை உரிமை மீறல் சம்பவங்களை விசாரிப்பதற்கான நியாயாதிக்க எல்லையினை இலங்கையின் உச்ச நீதிமன்றம் கொண்டுள்ளது.*

*அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் பாதிக்கப்பட்ட எந்தவொரு தரப்பும் அல்லது அவனது அல்லது அவளது சட்ட ரீதியான பிரதிநிதியினாலோ குறிப்பிட்ட அடிப்படை உரிமை மீறல் நிகழ்த்தப்பட்டு ஒரு மாதத்திற்குள்ளாக அல்லது அவ்வாறான அடிப்படை உரிமை மீறப்படுவதற்கான திட்டவட்டமாக கருதப்படுகின்ற திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னராக இலங்கையின் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றினை தாக்கல் செய்ய முடியும். அதுமாத்திரமன்றி சித்திரவதையும் ஏனைய கொடூரமான தண்டனைகள், மனிதத்தன்மையற்ற விதத்தில் அல்லது தரக்குறைவாக நடாத்தும் தண்டனை வழங்குவதும் ஆகியவற்றுக்கெதிரான சட்டம்* (CAT Act) *மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை* (ICCPR Act) *ஆகியவற்றின் கீழான வழக்குகளை கொண்டு நடாத்துவதற்கான நியாயாதிக்கத்தினையும் இலங்கையின் உச்சி நீதிமன்றம் கொண்டுள்ளது.*

***குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் உதவியளித்து பாதுகாப்பதற்கான சட்டம்***

***அனைத்துலக காலாந்தர மீளாய்வு செயற்குழுவின் அறிக்கை* (2012)ii – 25 *இன்* 128*வது பந்தியினால் வழங்கப்பட்டுளள சிபாரிசுகள், மற்றும்* (2008) *இன்* 90*வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகளுக்கமைவானது.***

19. *குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவியளித்து பாதுகாப்பதற்கான* 2015*ஆம் ஆண்டின்* 4*ஆம் இலக்க சட்டத்தினை இலங்கை* 2015 *மார்ச் மாதத்தில் நிறைவேற்றியது. குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் தகைமைகள்* (Rights and entitlements) *மற்றும் அத்தகைய உரிமைகள் மற்றும் தகைமைகளை பாதுகாத்து மேம்படுத்துவது பற்றியும் இந்த சட்டம் குறிப்பிடுகின்றது. அது மாத்திரமன்றி இது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டினை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் வழங்குகின்ற அதே நேரம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை உதவியளித்து பாதுகாப்பதற்கான நிதியமொன்றினையும் இச்சட்டம் தாபிக்கின்றது. அத்துடன் இச்சட்டமானது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையினை தாபிக்கின்ற அதே நேரம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவியளித்து பாதுகாப்பதற்கான இலங்ககை பொலிஸ் பிரிவொன்றையும் தாபிக்கின்றது.* 2016 *ஜனவரி* 08*ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இந்த அதிகார சபையின் ஆரம்பித்து வைத்தார். இந்த அதிகார சபையின் அமைப்புப்பணிகளை மேற்கொள்வது தொடர்பான ஆரம்பக்கட்ட பணிகளை முன்னெடுப்பதெற்கென* 2016*ஆம் ஆண்டுக்காக நீதியமைச்சு ரூபா இரண்டு மில்லியனை ஒதுக்கீடு செய்தது. இந்த அதிகார சபையினை வசதிப்படுத்துவதனூடாக அதன் பணிகளை ஆரம்பிக்கும் நோக்கத்திற்காக* 2017*இல் இந்த ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபையானது செயற்திட்டமொன்றை தயாரித்தது. அத்துடன்*

சாட்சிகளை பாதுகாக்கும் பிரிவினை தாபிப்பதை இலக்காக கொண்ட செயற்பாடுகளையும் பொலிஸ் மா அதிபர் முன்னெடுத்தார்.

***புதிய உள்நாட்டு சட்டம்***

20. இலங்கை 2016 பெப்ரவரி 08ல் மாற்றுத்திறனாளிகளின் உரிமை தொடர்பான உடன்படிக்கையிலும், 2015 டிசம்பர் 10ம் திகதி வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து சகலரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டது, அதனை தொடர்ந்து இந்த உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளை உள்நாட்டு சட்டத்துடன் இணைத்துக்கொள்ளத்தக்க வகையிலான ஆக்கபூர்வமான சட்டவாக்கத்தினை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட சட்டவாக்கத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கான புதிய அதிகார சபையொன்றும் தாபிக்கப்படவுள்ளது. வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து சகலரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை தொடர்பான சட்ட வரைபுக்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு அதனை விவாதித்து நிறைவேற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் சேர்க்கப்பட்டுள்ளது.

***B. அமுல்படுத்துவது தொடர்பாக தாபிக்கப்பட்ட பொறிமுறைகள்***

***இலங்கை மனித உரிமை ஆணைக்குழு***

**(2012) 127வது பந்தியின் - 127 (2012) – 30, 31, 32, 23, 34, 36, 37, 38, 39, மற்றும் 40 உம் (2012) 128வது பந்தியின் - 14 மற்றும் 28அத்துடன், (2008) ஆண்டின் 89வது பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகளுக்கமைவான சிபாரிசுகள்**

21. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமை தொடர்பான விவகாரங்களை கையாள்கின்ற முன்னணி நிறுவனமாகும். 2015 மே 15ம் திகதி அரசியலமைப்பின் 19வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை மீளக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அரசியலமைப்பு திருத்தமானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட சட்டரீதியான அதிகாரிகளை நியமிப்பதற்கு ஏற்கனவே ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சுயவிருப்பு அதிகாரத்தினை கட்டுப்படுத்துகின்றது. இவ்வாறான நியமனங்கள் தற்போது பலதரப்பட்ட அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் சாராத உயர்மட்ட செயற்பாட்டாளர்கள் ஆகியோரை கொண்ட அரசியலமைப்பு சபையினால் பரிந்துரைக்கப்படுகின்றது. அதற்கமைவாக மனித உரிமைகளுக்காக அதிகம் வாதாடக்கூடியவரென பாராட்டப்பட்ட முன்னணி செயற்பாட்டாளரான கலாநிதி தீபிகா உடகம அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய தலைமை உத்தியோகத்தராக 2015 ஒக்டோபர் மாதத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

22. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மீறப்பட்ட அடிப்படை உரிமைகள் அல்லது திட்டவட்டமாக மீறப்படவுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பான முறைப்பாடுகளை கையாள்வதற்கும் அவற்றுக்கு நல்லிணக்கம் மற்றும் நடுநிலை வகிப்பதன் ஊடாக தீர்வுகளை வழங்குவதற்குமான அதிகாரத்தினை கொண்டுள்ளது. அத்துடன் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்புரி விடயங்களை மேற்பார்வை செய்வதற்குமான

அதிகாரத்தினையும் கொண்டுள்ளது. அது மாத்திரமன்றி, மனித உரிமைகளை மேம்படுத்தி பாதுகாப்பதுடன் தொடர்புபட்ட கொள்கைகளை வகுப்பதிலும் மற்றும் அதற்கான சட்டவாக்கங்களை வடிவமைப்பதிலும் அரசாங்கத்திற்கு உதவுதற்கும் ஆலோசனை வழங்குவதற்குமான அதிகாரத்தினையும் இந்த ஆணைக்குழு கொண்டுள்ளது. அத்துடன் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகள் மற்றும் தரத்திற்கும் அமைவாக தேசிய சட்டங்கள் மற்றும் நிருவாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான கண்டிப்பான நடைமுறைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பாக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளையும் இந்த ஆணைக்குழு முன்வைக்க முடியும்.

***பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு***

23. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சானது மகளிர் தொடர்பான கொள்கைகளை அமுல்படுத்துவது மற்றும் பெண்களுக்கெதிரான சகல வடிவங்களிலுமான பாகுபாடான செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கான உடன்படிக்கையின் கீழான கடப்பாடுகளை அமுல்படுத்துவதற்குமான பொறுப்புவாய்ந்த நிறுவனமாகும். அதுமாத்திரமன்றி, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மகளிர் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பொலிஸ் உதவி தளம் (Police Help Desks)இ பிரதேச செயலக மட்டத்திலான பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பிரிவு ஆகிய மகளிர் வலுவூட்டல் தொடர்பாகவும் மற்றும் பெண்கள் உரிமையினை மேம்படுத்தி பாதுகாப்பதற்குமான முக்கிய பணிகளை ஆற்றிவருகின்றன.

24. சிறுவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக கையாள்வதற்கும் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான பட்டயத்தை அமுல்படுத்துவதற்குமான உயர் சபையாகவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு காணப்படுகின்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாராமரிப்பு சேவைகள் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான நிறுவனங்களாகும்.

சிறுவர் நலன் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான குறிப்பிட்ட சில விவகாரங்கள் சமுக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சு, நீதி அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு உள்ளிட்ட பல்வேறு அமைச்சுக்கள் கையாளப்பட்டு வருகின்றது. மகாணமட்டத்தில், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களமானது மாகாண ஆணையாளர்களினால் நிருவகிக்கப்படும் அதன் மாகாண திணைக்களங்களை ஒன்பது மாகாணங்களிலும் கொண்டுள்ளது. மாகாண நன்னடத்தை திணைக்களமானது அதற்கான நிதிகளை மத்திய அரசின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தினூடாக பெற்றுக்கொள்கின்றது. மாவட்ட மட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுவர் உரிமைகளின் முன்னேற்றத்துடன் தொடர்புபட்ட சகல அம்சங்களையும் கண்காணிப்பதற்காக மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய குழுக்கள் பல்வேறு துறைகளிலுமிருந்தும் அழைத்துவரப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அரச பணியாளர்கள் அதே போன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுவர் நலன் சார் விடயங்களில் ஈடுபட்டு வருகின்ற சமயத் தலைவர்கள் ஆகியோரை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

***அரச கரும மொழிகள் ஆணைக்குழு***

25. அரச கரும மொழிகள் ஆணைக்குழுவானது 1991ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டு மொழி தொடர்பாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான சகல அதிகாரங்களும் கையளிக்கப்பட்டுள்ளன. மொழிக்கொள்கையினை பரிந்துரைத்தல், அரச கரும மொழிகளை பயன்படுத்துவதனை மேம்படுத்துவதும் பாராட்டுதலும்

*மற்றும் மொழிச்சட்ட மீறல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடு தொடர்பாகவும் விசாரணைகளை நடாத்துவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*

***அரச சார்பற்ற நிறுவன மேற்பார்வை***

**(2012) – 85 128*ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்***

26. *இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பினை கொண்;ட அரச முகவரகமான அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகமானது தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. இச் செயலகம் ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தது. ஆயினும் தற்போது அரச சார்பற்ற நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் பணி ஒரு சிவிலியன் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

***C. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம்***

**(2012) 127*வது பந்தியில் -* 5, 6, 7, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 24, 29, 41;**

**(2013) 4.2 iii *பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகள்***

27. 2011 - 2016 *காலப்பகுதிக்கு மனித உரிமைகளை மேம்படுத்தி பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமானது கடந்த மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால்* (Ministry of Human Rights and Disaster Management) *தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதற்கமைவாக,* 2011 *மே மாதத்தில் அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து அதன் அமுல்படுத்துகையினை கண்காணிப்பதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இதன் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கென குறித்தொதுக்கப்பட்ட வளங்களின் மிகக் குறைந்தளவிலான ஒதுக்கீடு மற்றும் பூரண ஈடுபாட்டுடனான நிலையான முகவரகமின்மை உள்ளிட்ட பல்வேறு குறிப்பிடத்தக்க சவால்களை இந்த திட்ட அமுலாக்கத்தின் போது முன்னைய அரசாங்கம் கடந்து வந்துள்ளது. இந்த நிலையில், இத்திட்டத்தினை பரப்புவதற்கும் மற்றும் அமுல்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் கடந்த அரசாங்கத்தின் போது கைவிடப்பட்டிருந்தன.*

28. *எவ்வாறாயினும்* 2015 *ஜனவரியில் நிகழ்ந்த அரசாங்க மாற்றத்தினை தொடர்ந்து, தற்போதைய அரசாங்கம் முன்னைய செயற்திட்டத்திலிருந்து கீழ்வரும் செயற்பாடுகளை அடையாளம் கண்டு அவற்றை தற்போதைய மீளமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுடன் ஒருங்கிணைத்துள்ளன:*

*a. சர்வதேச நியமங்களை அடையக்கூடிய வகையில்* 1979*ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச் சட்டத்தை மீளாய்வு செய்தல்*

*b. ஒரு கைது தொடர்பில் அதன் குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கும், தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை நீதவான்கள் சென்று பார்வையிடுவதற்கு முடியுமாயிருப்பதற்கும் அத்துடன் சட்டத்தரணிகள் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் வழிவகை செய்வதற்கும் ஏற்ற வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையினை திருத்தம் செய்தல்.*

*c. வலிந்து காணாமலாக்கப்படுவதை குற்றமாகக் கொள்ளல்*

*d.* சாட்சி, பாதிக்கப்பட்டவர் ஆகியோரை பாதுகாக்கும் சட்டத்தை நிறைவேற்றி முழுமையாக அமுல்படுத்துதல்.

*e.* தகவலறியும் உரிமை தொடர்பான சட்டவாக்கத்தை மேற்கொள்ளல்

*f.* நீதி நிர்வாக செயற்பாடுகளின் தாமதத்தினை அறிவிப்பதற்கான முறையொன்றினை அறிமுகம் செய்தல்

*g.* அரசாங்கத்துறை நிறுவனங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கெதிரான கொள்கையினை மீளாய்வு செய்து அமுல்படுத்தல்.

29. முன்னைய செயற்திட்டங்களை அமுல்படுத்தும் செயன்முறையின் போது கற்றுக்கொண்ட கடுமையான பாடங்கள் தற்போதைய தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2017 - 2021 இன் உருவாக்கம், பரப்புரை செய்தல் மற்றும் அமுல்படுத்துகை செயற்திட்டங்களின் போது கருத்திலெடுக்கப்பட்டுள்ளது.

30. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2017 – 2021ற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டு அது தற்போது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான மொழிபெயர்ப்பு இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. இத்திட்டமானது 10 பிரதான கருப்பொருட் பரப்புக்களின் கீழும் மனித உரிமைகளை மேம்படுத்தி பாதுகாப்பதுடன் தொடர்புடையதும் அளவிடக்கூடியதும் சாத்தியமானதுமான செயற்பாட்டு நோக்குகளை கொண்டுள்ளது.[iv] இத்திட்டம் வெளிவிவகார அமைச்சினை பிரதானமாக கொண்ட அமைச்சுக்களுக்கிடையிலான குழுவொன்றிற்கூடாக அமுல்படுத்தப்படும்.

### *D.* மனித உரிமைகள் கல்வி

**(2012) 127ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் - 35, 80, 81, 86 மற்றும் 87 அத்துடன் (2008) 91,92 மற்றும் 112 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகள்**

31. ‘மனித உரிமைகள்’ என்ற விடயம் இரண்டாம் நிலை கல்வி பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதை கல்வி அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. அதுமாத்திரமன்றி மனித உரிமைக் கல்வியானது சகல சட்ட அமுலாக்கல் அதிகாரிகள், ஆயுதம் தாங்கிய படை மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அவர்களது பயிற்சியின் ஒரு பகுதியாக காணப்படுகின்றது. அத்தகைய பயிற்சியானது அரசியல் யாப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பற்றிய விரிவுரைகளையும், மனித உரிமை தொடர்பான சர்வதேச விதிமுறைகளையும், குற்றவியல் நடைமுறை தொடர்பான சட்டத்தினையும், ஒரு பிரஜையின் உரிமைகள் தொடர்பாகவும் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றினையும் கொண்டுள்ளது.

32. இலங்கை இராணுவமானது அதன் சகல படையணிகளுக்கும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் தொர்பான பயிற்சிகளை வழங்கும் நோக்கத்தை இலக்காகக் கொண்ட ஒரு இயக்குனர் சபையினை கொண்டுள்ளது. அதற்கு மேலதிகமாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் (ICRC) இலங்கை இராணுவப் படைகளை சேர்ந்தவர்களுக்கு சர்வதேச

*மனிதாபிமான சட்டம் தொடர்பாக தொடர்ச்சியான பயிற்சிகளை நடாத்தி வருகின்றது. பொலிஸ் கல்லூரிக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்படும் சகலருக்கும் தமது அடிப்படை பயிற்சியின் ஒரு பகுதியாகவும், பொலிஸ் உயர் பயிற்சி நிறுவகத்தினால் பதவி உயர்வு தொடர்பாகவும் புதிய வலுவூட்டல் நுட்பங்கள் தொடர்பாகவும் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளின் போதும் மனித உரிமைகள் தொடர்பான விடயம் ஒரு பகுதியாக காணப்படுகின்றது.*

33. *மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, இலங்கைப் பாராளுமன்றமும் பொதுநலவாய பாராளுமன்ற கூட்டமைப்பும் இணைந்து* 2016 *பெப்ரவரி மாதத்தில் மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம் என்ற தலைப்பில் பொதுநலவாய பிராந்திய கருத்தரங்கொன்றினை நடாத்தியது. இலங்கை மற்றும் பங்களாதேஸ், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகியன உள்ளிட்ட பொது நல வாயத்தில் உள்ள ஆசிய நாடுகளிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விற்பன்னர்கள் ஆகியோர் இந்த கருத்தரங்கில் பங்குபற்றினர்.*

## *IV.* தன்னார்வ உறுதிமொழிகள் மற்றும் பரிந்துரைகளை அமுல்படுத்துதல்

### *இடைவெட்டு பிரச்சினை*

### *சமத்துவமும் பாகுபாடற்றிருத்தலும்*

### 128 (2012) - 53 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்

34. *சமத்துவம் மற்றும் பாகுபாடற்றிருப்பதற்கான உரிமை தொடர்பாக இலங்கை அரசியலமைப்பின்* 12*வது சரத்து உத்தரவாதமளிக்கின்றது. மேலு, பாலியல் நோக்கு,பால் நிலை அடையாளம் மற்றும் இயலாமை என்பவற்றின் அடிப்படையிலான பாகுபாடானது தற்போது இலங்கை அரசியலமைப்பில் தெளிவான முறையில் தடைசெய்யப்படவில்லை.*

35. *எவ்வாறாயினும், அடிப்படை உரிமைகள் தொடர்பான பாராளுமன்ற உப குழுவின் இறுதி அறிக்கையானது இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயமானது பாலியல் நோக்கு, பால் நிலை அடையாளம் மற்றும் இயலாமை அகியவற்றின் அடிப்படையில் பாகுபாடற்றிருப்பதற்கான உத்தரவாதங்களை உள்ளடக்கியுள்ளதாக சிபாரிசு செய்துள்ளது. அது மாத்திரமன்றி தற்போதைய தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம்* (NHRAP)2017 - 2021 *இலங்கையின் தண்டனைக்கோவையிலுள்ள சகலவிதமான பாகுபாடுகள் தொடர்பான ஏற்பாடுகளையும் இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றது.*

36. *இலங்கை அரசியமைப்பின்* 16(1) *சரத்தில் அரசியலமைபின் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தில் "ஏற்கனவே உள்ள சகல எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் எழுதப்படாத சட்டம் ஆகியவை செல்லுபடியாகுவதுடன், நடைமுறைப்படுத்தப்படும்' என்றுள்ளது. இருந்தபோதிலும், குறிப்பிட்ட ஒரு தனிநபருக்கோ அல்லது சமூகத்திற்கோ எதிராக நிகழ்த்தப்படும்*

குற்றவியல் சட்ட விதிகள் மற்றும் சமனற்ற அல்லது குற்றவியல் சட்டங்களை இந்த கட்டுரை ஏற்றுக்கொள்ளாது என்பதை பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் பேரவைக்கு முன்னதாக இலங்கை தெளிவுபடுத்துகின்றது. இலங்கை அரசியமைப்பின் 80(3) சரத்தின் கீழ் சட்டத்தின் பின்விளைவு நீதித்துறை மீளாய்வு நீக்கப்பட்டுள்ளது.

37. குறிப்பிட்ட சில அரசியலமைப்பு சீர்திருத்தம் தற்போதைய அரசியலமைப்பு சீர்திருத்த உள்ளடக்கத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன. அரசியலமைப்பபு மற்றும் சட்ட மீளாய்வு அறிமுகம் ஆகியவற்றின் 16(1) சரத்திற்கமைய, விதிகள் மீதான பொதுமக்கள் பிரதிநிதி சபை மற்றும் அடிப்படை உரிமைகள் மீதான பாராளுமன்ற உபக் குழுவிற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. இந்த சிபாரிசுகள் தற்போது அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற இயக்கக்குழுவினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

**நல்லிணக்கமும் பொறுப்புக்கூறலும்**

127வது பந்தி (2012) – 8, 9, 21, 22, 23, 25, 26, 27, 28, 42, 45, 46, 52, 59, 75, 76, 77, 78, 82, 85, 89 இல் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்

38. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு 2015 செப்டம்பர் மற்றும் 2017 மார்ச் மாதத்திலும் நிறைவேற்றிய தீர்மானங்களான முறையே 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்களுக்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணையினை வழங்கியுள்ளது. இந்த தீரமானங்கள் நல்லிணக்க மேம்பாடு, யுத்தத்தின் போது சர்வதேச மனித உரிமைச் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் ஆகியவை துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்தவது மற்றும் நாட்டில் மனித உரிமைகள் தொடர்பான நிலமையினை முன்னேற்றுவது ஆகியவை தொடர்பில் இலங்கைக்குள்ள பரந்துபட்ட கடப்பாடுகளை எடுத்துரைக்கின்றது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகள் இத் தீர்மானத்தின் சாரம்சத்தில் ஒரு பகுதியாக கொண்டுவரப்பட்டுள்ளது. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2017 – 2021 இனை வடிவமைப்பதிலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கை ஒரு இணை ஆவணமாக காணப்பட்டது. ஆனபோதிலும் தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தில் (NHRAP) குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும் இத் தீர்மானம் ஆகியவற்றின் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதன் ஊடாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டியது. காணாமல் போனோர் தொடர்பான ஒரு அலுவலகம் (Office on Missing Persons), ஒரு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு (truth-seeking commission), யுத்தப் பாதிப்புக்களுக்க நஷ்டஈடு வழங்குவதற்கான ஒரு அலுவலகம் (Office on Reparations) மற்றும் சுயாதீன சட்ட ஆலோசகர்களுடன் கூடிய ஒரு நீதிமன்றம் ஆகியன உள்ளடங்கலாக இடை நிலை நீதி பொறிமுறையினை தாபிப்பதற்கு இந்த தீர்மானங்கள் விஷேடமாக உறுதியளிக்கின்றது.

39. இலங்கை, நாட்டில் ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தினை பாதுகாப்பதற்கென, அதிமேதகு ஜனாதிபதி அவர்களை அமைச்சராக கொண்ட தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஒரு முகவரகமாக தேசிய ஐக்கியத்திற்கும்

நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் ஆகிய மூன்று புதிய முகவரகங்களை தாபித்தது. தொடர்புடைய இரண்டு அமைச்சுக்களினதும் ஆலோசனையுடன் பலதரப்பட்ட பங்குதாரர்களுடன் ஒரு வருடம் முழுவதும் மேற்கொண்ட ஆலோசனைகள் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கு ஆணைக்குழு அறிக்கை உட்பட ஏற்கனவே காணப்படுகின்ற நல்லிணக்கம் தொடர்பான முன்வைத்தல்கள் ஆகியவற்றின் மீதான மீள்பரிசீலனை ஆகியவற்றுக்கூடாக தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம் நல்லிணக்கம் தொடர்பான தேசி கொள்கை வரைபொன்றை தயாரித்தது. இந்தக் கொள்கையானது நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவதுடன் தேசிய நல்லிணக்கத்திற்கான சீரானதும் ஒத்திசைவானதுமான அணுகுமுறையொன்றினை எதிர்கொண்டு நல்லிணக்கத்திற்காக பணியாற்றுகின்ற சகல பங்குதாரர்களையும் வழிநடாத்துகின்றது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் ஆகியோரினால் கூட்டாக அமைச்சரவைக்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, 2017 மே மாதத்தில் இந்த கொள்கையினை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகமானது அரச மற்றும் தனியார் ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் சமுக வலைத்தளங்கள் ஊடாகவும் பன்மைத்துவ மற்றும் உள்ளீர்க்கும் இலங்கை பற்றிய நோக்கெல்லையினை வளர்ப்பதற்கான தேசிய மட்டத்திலான ஊடகப் பிரச்சாரத்தினையும் ஆரம்பித்தது.

40. 2015 டிசம்பரில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் 30/1 இன் கீழான கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கம் பிரதமர் அலுவலகத்தின் கீழ் ஒருங்கிணைந்த நல்லிணக்கப் பெறிமுறைச் செயலத்தினை (Secretariat for Coordinating Reconciliation Mechanisms (SCRM)) தாபித்தது. ஒருங்கிணைந்த நல்லிணக்க பொறிமுறைக்கான செயலகமானது, அரசாங்கத்தின் இடைநிலை நீதிச்செயற்பாட்டு பொறிமுறையின் அமுலாக்கத்தை வடிவமைத்து வசதிப்படுத்துவதை இலக்காக கொண்டிருந்தது. அத்துடன், தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் (ONUR) மீள் நிகழ்வுக்குட்படாத நிகழ்ச்சி நிரலை அடைந்துகொள்வதற்கு தேவையான உதவிகளை வழங்கி வசதிப்படுத்துவதற்காகவும் பணியாற்றுகின்றது.

41. ஒருங்கிணைந்த நல்லிணக்கப் பெறிமுறைச் செயலகமானது அது தாபிக்கப்பட்டதிலிருந்து, இலங்கையின் நல்லிணக்கப் பொறிமுறையை வடிவமைப்பதில் சர்வதேச ரீதியான சிறப்புச் செயன்முறைகள்ஃ(international best practices) உள்வாங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் ஐக்கிய நாடுகளின் இலங்கை அணியின் (UN Country Team) கூட்டுப்பங்காண்மையில் இணைந்துகொண்டது. இந்த கூட்டுப்பங்காண்மையானது UNDP, OHCHR, UN DPA, IOM, UNICEF, மற்றும் UN Women ஆகிய அணிகளை உள்ளடக்கியதாகும். அதற்கமைவாக, அரசாங்கத்தின் நல்லிணக்கம் தொடர்பான நிகழ்ச்சி நிரலில் காணப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளத்தக்க விடயப்பரப்புக்கு ஒத்தாசை வழங்குவதற்காக சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான முன்னுரிமை வேலைத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த நல்லிணக்கப் பெறிமுறைச் செயலகமானது அரசாங்கத்தின் முக்கிய பங்குதாரர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் முகவரகங்களுடன் நெருங்கிய உறவினை ஏற்படுத்திய (அதன் திட்ட முன்மொழிவு தொடர்பான) கருத்துப்பபடிவத்தினை இறுதிப்படுத்துவதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளுடன் இணைந்து திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பான ஆக்கக் கூறுகளை இறுதிப்படுத்தும் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது.

42. இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் மீள் நிகழ்வுக்குட்படாதிருத்தல் (non-recurrence) தொடர்பான சகல செயற்பாடுகளுக்குமான ஒட்டுமொத்த வழிகாட்டுதல்களை வழங்குவதற்கென நல்லிணக்கம் தொடர்பான உயர் மட்ட வழிநடாத்தல் குழுவொன்று தாபிக்கப்பட்டது. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகத்தின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க இந்த குழுவுக்கு தலைமை வகிப்பதுடன் கூட்டு நல்லிணக்க பொறிமுறைக்கான செயலகத்தின் செயலாளர் நாயகம் அதன் செயற்பணிநடத்துனராகவும் கடமையாற்றுகின்றார்.

43. 2016 ஜனவரியில், அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் இடைநிலை நீதிச்செயற்பாடு ஆகிய செயன்முறைகளை தொடர்பான ஆலோசனை படையணியொன்றினையும் (Consultation Task Force (CTF)) நியமித்தது. இந்த ஆலோசனை படையணியானது புகழ்வாய்ந்த சிவில் சமுக பிரதிநிதிகளை உள்ளடக்கியிருந்ததுடன் இந்த படையணிக்கு உரிய பங்குதாரர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திய பிரதிநிதிகள் குழுவொன்று மற்றும் நிபுணர் குழுவொன்று ஆகியவற்றினால் உதவியளிக்கப்பட்டது. இந்த ஆலோசனை படையணியானது தேசிய மட்டத்திலான ஆலோசனைகளை மேற்கொண்டு சுமார் 7000 இற்கும் மேற்பட்ட சமர்ப்பணங்களை பெற்றுக்கொண்டது. 2017 ஜனவரியில் அதன் இறுதி அறிக்கை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இடைநிலை நீதி செயற்பாட்டு பெறிமுறையினை தாபிக்கும் வகையிலான சட்டவாக்க வரைபொன்றை தயாரிக்கும் நடைமுறையின் போது கருத்தில் கொள்ளப்பட்டு வருகின்றது.

44. அரசாங்கம் 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்களுக்கமைவாக உறுதியளிக்கப்பட்டுள்ளவாறு நான்கு நீதிச்செயற்பாட்டு பொறிமுறைகளை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. முதலாவதாக, 2016 ஓகஸ்ட்டில் காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகமொன்றை தாபிப்தற்கான சட்டவாக்கத்தினை மேற்கொண்டது. இரண்டாவதாக, உண்மையைக் கண்டறியும் பொறிமுறை தொடர்பான சட்டவாக்க வரைபொன்றினை மேற்கொள்வதற்கான செயற்குழுவுக்கு சிரேஸ்ட கல்வியியலாளர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் இடைநிலை நீதிச்செயற்பாடு தொடர்பான நிபுணர்கள் (transitional justice experts) ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மேலே குறிப்பிடப்பட்ட ஆலோசனைப்படையின் பரிந்துரைகள் வரைபுச் செயன்முறையின் போது முற்றுமுழுதாக கருத்த்தில் கொள்ளப்பட்டது. மூன்றாவதாக,யுத்தப்பாதிப்புகளுக்கு நஷ்டஈடு வழங்குவற்கான அலுவலகமொன்றை தாபிப்பது தொடர்பான சட்டவாக்க வரைபினை மேற்கொள்வதற்காக யுத்தப்பாதிப்புகளுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பான தொழிநுட்ப வல்லுனர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த படையணியின் அறிக்கை, பல்வேறு அரச அமைச்சுக்களின் நோக்குகள் மற்றும் யுத்த பாதிப்புக்களுக்கான நஷ்ட ஈடு வழங்குவதில் அனுபவம் வாய்ந்த பகிரங்க உத்தியோகத்தர்களின் கருத்துக்கள் ஆகியன இதன் வரைபு நடவடிக்கையின் போது கருத்தில் கொள்ளப்பட்டன. உண்மையைக் கண்டறியும் பொறிமுறை மற்றும் யுத்தப் பாதிப்புகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான அலுவலகம் ஆகியவை தொடர்பான சட்ட வரைபானது, அதற்கான அரசியலமைப்பு இணக்கப்பாடு தொடர்பாக சட்ட மா அதிபரினால் பரிசோதிக்கப்பட்டு அனுமதி கிடைக்கப்பெற்றதும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்.

45. காணி, கல்வி,வாழ்வாதாரம், மொழி மற்றும் உளவியல் ரீதியிலான உதவிகள் ஆகிய விடயங்களில் குறுகிய மற்றும் இடைக்கால நம்பிக்கையினை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கூடாக நல்லிணக்கத்ததை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஆர்வத்தினை வெளிக்காட்டுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளில் அனேகமானவை உண்மையில்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவைகளாகும்.

46. இராணுவத்தினரால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் தனியார் காணிகளை விடுவிப்பது அரசாங்கத்தின் மற்றுமொரு பாரிய முன்னுரிமையை கொண்ட பணியாகும். 2009இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதிலிருந்து 24,336.25 ஏக்கர் தனியார் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன, அதில் 4,190.58ஏக்கர் காணிகள் 2015 ஜனவரிக்குப்பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக கையகப்படுத்தப்பட்டிருக்கும் 6051.36 ஏக்கர் தனியார் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவேண்டியுள்ளன.

47. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் 2009 இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள பாடசாலைகள் மீளவும் திறக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகளினால் இணைத்துக்கொள்ளப்பட்ட முன்னாள் சிறுவர் போராளிகள் உட்பட சிறுவர்கள் தற்போது பாடசாலைக்குச் செல்கின்றனர். அதேநேரம், 2009 இலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளால் கல்வி சிதைக்கப்பட்ட முன்னாள் பெண் சிறுவர் போராளிகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரம் ஆகிய பரீட்சைகளுக்கு தோற்றியுள்ளனர்.

48. வடக்கு கிழக்கில் 23.4 வீதமான குடும்பங்கள் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாக இருக்கையில், 2015 மார்ச்சில் அரசாங்கம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தேசிய குழு (National Committee on Female-Headed Households (FHHs)) இனை உருவாக்கியதுடன் கிளிநொச்சியில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் தேசிய நிலையத்தையும் தாபித்தது. இந்த குழுக்கள் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை தொழிற்படையுடன் ஒருங்கிணைத்து நிலைபேறான வாழ்வாதாரத்திற்கு வழிகோலியது.

49. 2015 இல் அரசாங்க மாற்றம் நிகழ்ந்ததை தொடரந்து, அரசாங்கம் தமிழ் சிங்களம் ஆகிய இரண்டு தேசிய மொழிகளிலும் தேசிய கீதத்தை பாடும் நடைமுறையினை அறிமுகம் செய்தது. அதன்படி, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பெப்ரவரி 04ம் திகதி சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

50. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமுகங்களுக்கு உளவியல் பராமரிப்பு ஏற்பாடுகளுக்கான கட்டமைப்பினை வலுவூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. உதாரணமாக, தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் (ONUR) ஆனது, வடமாகாணத்தில் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிகளை (‘training of trainers’) நடாத்துவதற்காக மனநல வைத்திய நிபுணர்கள் மற்றும் உளவியலாளர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளனர். இந்த பயிற்சிப் பட்டறைகளானது ஆயிரத்துக்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அவர்கள் அங்கம் வகிக்கும் சமூகத்தில் காணப்படும் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவிபுரியும் ஏற்பாட்டுக்காக பயிற்சியளிப்பதை இலக்காக கொண்டதாகும்.

***B. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்***

வாழ்வுரிமை, சுதந்திரம் மற்றும் தனிமனித பாதுகாப்பு

**127 (2012) பந்தியின் 54, 74, 79, 83, 84, 110, பந்தியின் – 57, 94ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்**

**4.9 (2013) பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள தன்னார்வ உறுதி மொழிகள்**

51. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் (NHRAP) 2017 – 2021 ஆனது, இலங்கையின் அரசியலமைப்பில் வாழ்வுரிமை தொடர்பான தெட்டத் தெளிவான அங்கீகாரத்தினை வழங்கக்கூடிய மிகச் சரியான மாற்றமொன்றினை அறிமுகம் செய்வதற்கான அர்ப்பணிப்பொன்றினை உள்ளடக்கியுள்ளது. அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தில் வாழ்வதற்கான உரிமையினை உள்வாங்குவது தொடர்பாக அடிப்படை உரிமைகள் தொடர்பான பாராளுமன்ற உபகுழு சொல்லப்படவேண்டிய எல்லா விடயங்களையும் உள்ளடக்கிய பரிந்துரைகளை முன்வைத்துள்ளது, அரசியலமைப்பு மாற்றத்தின் விளைவாக அத்தகைய உட்சேர்க்கை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

52. கடந்த காலங்களில் நடைபெற்ற சட்ட விரோத கொலைகள் தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. உதாரணமாக, அரசாங்கம் வெளிநாடுகளில் வசித்துவரும் குறிப்பிட்ட சாட்சிகளுக்கு நிலுவையிலுள்ள நீதித்துறை நடைமுறைகள் தொடர்பில் சாட்சியமளிக்குமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளதுடன் அவர்கள் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவியளிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான சட்டத்தின் கீழ் விமான நிலையத்திலிருந்து விமான நிலையம் வரையான பாதுகாப்பு உட்பட உச்சக்கட்ட பாதுகாப்பு அளிக்கப்படுவர் என அறிவித்துள்ளது. இலங்கைக்கு வெளியில் உள்ள அதிகாரமளிக்கப்பட்ட "தூர அமைவிடத்தில் ('remote location') இருந்து சாட்சிகள் ஒலி – ஒளி (audio-video linkage) தொடர்பூடகங்கள் வாயிலாக சாட்சியமளிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் சட்டத்தின் 31வது சரத்தில் திருத்தம் மேற்கொள்ளும் மசோதா அமைச்சரவையினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு ரத்துபஸ்வெல என்ற இடத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நிகழ்த்துமாறு கட்டளை பிறப்பித்ததாக கூறப்படும் சந்தேக நபரான இராணுவ அதிகாரி ஒருவர் பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் 2017 மார்ச் மாதத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

53. இலங்கை 1976ஆம் ஆண்டிலிருந்து தனது ஆட்சிப்பரப்பிற்குள் நீதித்துறை கட்டளையொன்றின் பேரில் மரண தண்டனை நிறைவேற்றும் நடைமுறையினை இல்லாமலாக்கியுள்ளது. மேலும், மரண தண்டனை நிறைவேற்றுவதை நிறுத்தி வைப்பதற்கான ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானத்திற்கும் இலங்கை வாக்களித்திருந்தது.

54. சிறைச்சாலை மறுசீரமைப்பு, சட்ட ஆலோசனையை பெறுதல் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிராயிருத்தல் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க சில விடயப்பரப்புகளில் வாழ்வுரிமை, சுதந்திரம் மற்றும் தனிமனித பாதுகாப்பு ஆகிய விடயங்களை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மதிப்பளிக்கின்ற வகையிலும் இலங்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

55. இலங்கையில் சிறைச்சாலை முறையின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கிலும் சிறைச்சாலைகளின் நெருக்கடி தொடர்பான பிரச்சினைகளை குறைக்கும் நோக்கிலும் சிறைச்சாலை நிர்வாகம் தொடர்பான புதிய மசோதவொன்றின் பணிகள் தற்போது முடிவுறுத்தப்படும் தறுவாயில் இருக்கின்றது. வரைபு மசோதாவொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையினால் திருத்தங்கள் சிபாரிசு செய்யப்பட்டு தற்போது அத்தகைய திருத்தங்கள்

சேர்க்கப்படும் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதுமாத்திரமன்றி, சிறைக்கைதிகளின் நெருக்கடிகளை குறைப்பதற்காக நகரப்புற சிறைச்சாலைகளை இடம்மாற்றும் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

56. சிறைச்சாலைகள் திணைக்களமும் ஐக்கிய நாடுகளின் நெல்சன் மண்டேலா விதிகள் மற்றும் பேங்கொக் விதிகள் ஆகியவற்றின் போக்கினை சிறைச்சாலை நிர்வாக முறைக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் தங்களின் குடும்பத்துடன் தொடர்பு கொள்வதற்காக அவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய வசதிகள் எதிர்காலத்தில் ஏனைய சிறைச்சாலைகளுக்கும் வழங்கப்படும். மேலும், கைதிகள் அவர்கள் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து விடுதலையாகும் திகதி வரையான பதிவுகளை செயற்திறனான வகையில் பேணத்தக்க வகையில் சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமையொன்றும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

57. பொலிஸ் சட்டத்தின் 55வது பிரிவின் கீழ் பொலிஸ் மா அதிபரினால் 2012 இல் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கூடாக, சந்தேக நபரொருவர் தேவையான சட்ட ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கான உரிமை வலுவூட்டப்பட்டுள்ளது. இது பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேச நபரொருவரின் நலனை பிரதிநிதிப்படுத்தும் சட்டத்தரணி ஒருவருக்கு அத்தகைய சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை சென்று சந்தித்து குறித்த கைது தொடர்பான காரணங்களை கேட்டறிந்து கொள்வதற்கும் அதற்காக பொலிஸ் உத்தியோகத்தரிடம் தன்னை சந்தேக நபரின் சார்பாக பிரிதிநிதித்துவப் படுத்துவதற்குமான உரிமையினை வழங்குகின்றது. அதேவேளை, பொலிஸ் மா அதிபரினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை சட்டத்தின் வடிவத்திற்கு மாற்றுவதனை இலக்காகக் கொண்ட குற்றவியல் நடைமுறை (விஷேட ஏற்பாடுகள்) தொடர்பான திருத்தச்சட்ட மசோதாவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐக்கிய நாட்டு முகவரகங்கள் மற்றும் சிவில் சமுகம் ஆகிய தரப்புக்களின் பின்னூட்டலை அடிப்படையாக கொண்ட மேலதிக முன்னேற்றங்களை இணைத்துக்கொண்ட பின்னர் இந்த மசோதா பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

58. நீதி அமைச்சர் அவர்கள் குற்றவியல் நடைமுறைக் கோவை (Criminal Procedure Code) மற்றும் தண்டணைக் கோவை (Penal Code) அகியவற்றை மீளாய்வு செய்வதற்காக உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் தலைமையிலானதும் சிறந்த சட்டத்தரணிகளின் பங்குபற்றுதலுடன் இணைந்த வகையிலும் இரண்டு விஷேட குழுக்களை நியமித்துள்ளார். சர்வதேச நியமங்களுக்கமைவாக குற்றவியல்சார் நீதி நிர்வாக முறை தொடர்பாக பொருத்தமான மாற்றங்களை பரிந்துரை செய்வதற்கு இந்த குழுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

59. 2015 டிசம்பரில், குற்றப்பத்திரமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையினை பூச்சியமாக குறைப்பதற்கு (பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டம் ஆகியவற்றின் கீழ்) அரசாங்கம் கொள்கைத் திட்டமொன்றை வகுத்துள்ளது. அதனைத் தொடர்ந்து, தற்போது விஷேட பாதுகாப்பு சட்டங்களின் கீழ் எந்தவொரு சந்தேச நபரும் காரணமற்ற விதத்தில் தடுத்துவைக்கும் சம்பவங்கள் இடம்பெறவில்லை. அதேவேளையில் இந்தச் சட்டங்களின் கீழ் விசாரணைகள் நடாத்தப்பட்டு சந்தேச நபர்களுக்கெதிராக தொடரப்பட்ட வழக்குகளில் நிலுவையாக காணப்பட்ட வழக்குகளை முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் முன்னைய அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையாக உள்ள வழக்குகளை

துரிதமாக முடிவுறுத்துவதற்கென கொழும்பிலும் அனுராதபுரத்திலும் விஷேட உயர் நீதிமன்றங்கள் தாபிக்கப்பட்டன.

60. பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை மீள்பரிசீலனை செய்வதற்கும் அதனை இரத்துச் செய்வது அதற்கு பதிலாக சர்வதேச மனித உரிமை நியமங்களுடன் இணங்கும் வகையில் பயங்கரவாதத்திற்கெதிரான சட்டவாக்கத்தினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக, முன்மொழியப்பட்ட பயங்கரவாத்திற்கெதிரான சட்டத்திற்கான கொள்கை வரைபும் சட்டரீதியான கட்டமைப்புக்களும் நிபுணர் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பயங்கரவாதத்திற்கு எதிரான குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபையின் உள்ளிடுகைகள் வரைபு நடைமுறை தொடர்பாக மேற்கொள்ப்பட்ட கவனமான பரிசீலனையின் போது கவனத்தில் கொள்ளப்பட்டன.

**சித்திரவதையிலிருந்து விடுபடுதல்**

**128 (2012) பந்தியில் - 60, 61, 62, 63 76 மற்றும் 76 இல் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்**

61. நாட்டில் போர்க்கள எதிரிகளின் சித்திரவதையுடன் தொடர்புடைய தொடர்ச்சியான சவால்களை கடந்துவந்த அனுபவத்தினை இலங்கை கொண்டுள்ளது. அந்த சித்திரவதை தொடர்பான பூச்சிய சகிப்புத்தன்மை கொள்கையினை (‘zero tolerance policy’) கடைப்பிடித்து வருவதுடன் அரச அதிகாரிகளின் தலையீட்டின் காரமாக அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்களை மிகக் கடுமையாக கையாள்கின்றது. இந்நிலையில், கடந்த இரண்டு வருட காலத்தில் பல்வேறு சாத்தியமான அபிவிருத்தி பணிகள் இடம்பெற்றுள்ளது. இந்த அபிவிருத்திகள் சித்திரவதை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நேரடியான கொள்கைப் போக்கினை வெளிக்காட்டுகின்றது.

62. முதலாவதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை வலுப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய சுயாதீனத் தன்மை தற்போது நாட்டிலுள்ள மனித உரிமைகள் தொடர்பான நிலைமையில காணப்படும் இடைவெளிகளையும் மற்றும் சந்தர்ப்பங்களையம் மிகச் சரியாக அறிக்கையிடுவதற்கு வாய்ப்பளித்துள்ள முன்மாதிரியான தேசிய மனித உரிமைகள் நிறுவனம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது, அத்துடன் தேவைக்கேற்ப அவசியமான முன்னேற்ற செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதில் அரசாங்கத்தை முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபடுத்துகின்றது. சித்திரவதை தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தற்போதைய அறிக்கையிடலானது புதிதாக்கப்பட்ட சுயாதீனத் தன்மையின் நேரடியான விளைவாகும். போர்க்கள சித்திரவதை தொடர்பான ஒட்டுமொத்த மூலோபாயமும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டிற்கூடாக நிலைபேறாக வலுவூட்டப்பட்டுள்ளது.

63. இரண்டாவது, சித்திரவதை தொடர்பான நிலமைகளின் போது பாதிக்கப்பட்டவர்கள் தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்காக பாதிக்கப்பட்டவர்கள் மேலுமொரு சர்வதேச பொறிமுறையுடனான வாய்பு வழங்கப்பட்டுள்ளனர். 2016. ஆகஸ்ட் 06 இல், இலங்கை சித்திரவதைக்கெதிரான பட்டயத்தின் 22வது சரத்தின் கீழ் சித்திரவதைக்கெதிரான குழுவுக்கு இலங்கையினால் பட்டயத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டதன் மூலம், இலங்கையின் நீதிச்செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கின்ற நபர்களிடமிடுந்து அல்லது அவர்கள் சார்பாக தொடர்பாடல்களை பெற்றுக்கொள்வதற்கும் அவற்றை கருத்திற்கொளவதற்கும் காணப்படும் ஆற்றலை அங்கிகரிக்கும் வகையில் பிரகடனமொன்றை சமர்ப்பித்தது. இவ்வாறு சித்திரவதையினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு தனி நபரும் சித்திரவதைக்கெதிரான குழுவிடம் தமது முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும். அதற்கமைவாக இலங்கை அரசாங்கம் இந்தக்

குழுவுடன் கூட்டுறவாகி நாட்டிலுள்ள சட்டங்களுடன் ஒத்திசைவான அதன் பரிந்துரைகளை அமுல்படுத்தவதற்கும் நடைமுறை மேற்கொண்டுள்ளது. இக்குழுவின் ஆற்றல் தொடர்பான அங்கிகாரமானது சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்நாட்டில் தீர்வு கிடைக்காதபோது தீர்வினை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை மேம்படுத்துகின்றது. ஆகையினால் இது இலங்கையில் போர்க்கால சித்திரவதைகளுடன் தொடர்புடைய ஒட்டுமொத்த கட்டமைப்பினையும் வலுப்படுத்துகின்றது.

64. மூன்றாவதாக, சித்திரவதை நிகழ்த்தப்படுவதை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் சந்தேக நபர்களின் கைது மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பான பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சந்தேச நபர்களை கைது செய்யும் போதும் தடுத்து வைக்கும் போதும் உரிய நியமங்களும் நடைமுறைகளும் பின்பற்றப்படுவதன் அவசியம் பற்றி அதிமேதகு ஜனாதிபதி அவர்களும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிசாருக்கு பணிப்புரைகளை வழங்கியுள்ளனர். இந்த பணிப்புரைகள் 2016 மே மாதத்தில் வழங்கப்பட்டுளளன. சித்திரவதை செயற்பாடுகளை தடை செய்தல், விசாரணைகளை மேற்கொள்வதற்கான அரசியல் விருப்பத்தினை மீள வலியுறுத்தல் மற்றும் 1994ஆம் ஆண்டின் சித்திரவதைகள் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்தல் மற்றும் குற்றவாளிகளை தண்டித்தல் ஆகியவற்றினை அவர்கள் விஷேடமாக உள்ளடக்குகின்றனர்.

**வலிந்து காணாமலாக்கப்படுதல்**

**127 (2012) பந்தியில் - 3, 4, 60, மற்றும் 128 (2012) பந்தியின் 1, 2, 3, 4, 5 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்**

65. இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் இடம்பெற்ற காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கும் எதிர்காலத்தில் காணாமல் போகும் நிகழ்வுகள் மீளவும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்குமான சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலியகொட உட்பட ஊடகவியலாளர்கள் காணாமால் போனமை தொடர்பான விசாரணைகளிலும் முன்னேற்றத்தை கொண்டுவந்துள்ளது. பல்வேறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பிணை வழங்கப்பட்டுள்ளனர். விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டதும் வழக்குத் தொடர்வதற்கு எதிர்பாக்கப்படுகின்றது.

66. இலங்கை 2016 மே மாதத்தில் வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து சகலரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச பட்டையத்தில் கைச்சாத்திட்டது. கைச்சாத்திடலை தொடர்ந்து நிபுணர் குழுவொன்றினால் இந்த பட்டையத்தின் ஏற்பாடுகளை உள்நாட்டு சட்டத்துடன் இணைப்பதற்கான சட்டவாக்கம் தயாரிக்கப்பட்டது. வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்த சகலரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச பட்டயம் தொடர்பான மசோதாவுக்கு (ICPPED) அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு 2017 மார்ச் மாதத்தில் பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் இடப்பட்டுள்ளது. வலிந்து காணாமலாக்கப்படுவதை குற்றமாக்குதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் இருக்குமிடம் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் நஷ்ட ஈடுகளை பெற்றுக்கொள்வதற்கும் விணைத்திறனான பரிகாரங்களை வழங்குவதனை இந்த மசோதா முன்மொழிகின்றது.

67. வலிந்து அல்லது அறியாமல் நிகழ்த்தப்படுகின்ற காணாமலாக்கப்படுதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயற்குழுவினால் பரிசீலிக்கப்பட்ட 1688 காணாமல் போன சம்பவங்களுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளித்துள்ளது. அதுமாத்திரமன்றி 2015 நவம்பர் 9 தொடக்கம் 18ம் திகதி

வரை செயற்குழு இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு தடையின்றி செல்வதில் அரசாங்கத்தின் ஒத்துழைப்பினை அவதானித்தது.

68. அனேகமான காணாமல் போன சம்பவங்களை பொறுத்தவரையில் காணாமல் போனோரின் குடும்பத்தினர், காணாமல் போன நபர் இன்னும் உயிருடன் வாழ்வதாக நம்பிக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், அரசாங்கம், காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் காணாமல் போனோரின் பெயரிலுள்ள காணிகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் அவர்கள் பெயரிலான வங்கிக் கணக்குகளிலுள்ள பணத்தினை பெற்றுக்கொள்வதற்கும் உரிமையினை வழங்கும் வகையில் காணாமல் போனோருக்கு பதிலாக இறப்புச் சான்றிதழினை வழங்குவதற்காக இறப்புக்களை பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடு) சட்டத்தினை கொண்டுவந்துள்ளது. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகமானது இந்த நடைமுறைகளின் செயற்படுதலை வசதிப்படுத்தியது, அத்துடன் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் நாயகம் காணாமல் போனோருக்கான சான்றிதழ்களை வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளார்.

***பேச்சு மற்றும் கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம்***

**128 (2012) ஆம் பந்தியின் - 27, 49, 83, 87ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்**

69. 2016 ஆகஸ்ட் மாதத்தில், அரசாங்கம் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தினை கொண்டு வந்துள்ளது. இந்த புதிய சட்டமானது இலங்கையில் பேச்சு மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் ஆகியவற்றினை மேம்படுத்துகின்றது. இந்த சட்டத்தின் கீழ் ஒவ்வொரு பொது நிறுவனமும் பொது மக்களால் கோரப்படும் தகவல்களை வழங்குவதற்காக தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க கடமைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த புதிய சட்டம் பொது நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மைக் கலாச்சாரமொன்றை மேம்படுத்துவதற்காக முன்னெச்சரிக்கையாக வெளிப்பாடாக தகவல்களை வெளியிடுவதற்கு கோரிக்கை விடுக்கின்றது. இந்த புதிய சட்டமானது மேலும் இந்த புதிய சட்டத்தின் அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் பிரசைகளிடமிருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கும் அவற்றை முடிவுறுத்தவதற்குமாக சுயாதீன தகவலறியும் ஆணைக்குழுவொன்றையும் தாபிக்கின்றது. இந்தச் சட்டம் 2017 பெப்ரவரியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளதுடன் பிரசைகள் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக சட்டத்தை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

70. 2015ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஊடகச் சுதந்திரம் தொடர்பான நிலைப்பாடு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது. தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியின் அறிவுரைகள் அனுப்பிவைக்கப்பட்டதை தொடர்ந்து செய்தி வலைத்தளங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சகல கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. அதற்கமைவாக, அரசுக்கு சவாலான செய்தி வலைத்தளங்கள் உட்பட சகல செய்தி தளங்களும் எவ்விதமான கட்டுப்பாடுகளுமில்லாமல் சுமூகமாக செயற்பட முடியும். மேலும், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உட்பட ஊடகவியலாளர்கள் வடக்கு மற்றும் கிழக்கிற்கு செல்வதற்கான சுதந்திரத்திற்கு இருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ளன.

71. சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகள் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துகின்றது. உதாரணமாக, 2009 இல் படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் செய்திப்பத்திரிகையின் பிரதம ஆசிரியரான

லசந்த விக்கிரமதுங்க தொடர்பான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2017 பெப்ரவரியில், இந்த கொலையுடன் சம்மந்தப்பட்டதாக கருதப்படும் பல்வேறு சந்தேச நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

***சிந்தனை, மனச்சாட்சி மற்றும் சமயம் தொடர்பான சுதந்திரம்***

**127 (2017) பந்தி – 56, 57; 128 (2012) - 91 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்**

72. இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில், நாட்டில் சமயங்களுக்கிடையிலான பிரச்சினைகளின் பதட்ட நிலை காரணமாக மதச் சுதந்திரம் ஒரு முக்கியமான பிரச்சினையாக காணப்பட்டது. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2017 – 2021 ஆனது மதவிரோத செயற்பாடுகளை குற்றமாக கொள்ளும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தின் (ICCPR Act) 3 (1) பிரிவினை வலுப்படுத்துவதற்கு காத்திரமான அர்ப்பணிப்பினை கொண்டுள்ளது.

73. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகத்தின் கட்டளையானது சமயம்சார் சகவாழ்வினை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க கரிசனையினை கொண்டிருக்கின்றது. இது மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக எல்லா மதங்களையும் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் நிகழ்வுகளை நடாத்தகின்றது. 2016 இல் 21 மாவட்டங்களிலிருந்து 1009 பாடசாலைகளை சேர்ந்த 47,500 க்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்குபற்றலுடன் 133 சமய மற்றும் கலாசார விழாக்கள் கொண்டாடப்பட்டிருந்தன.

74. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகமானது, சமயங்களுக்கிடையிலான வன்முறையின் குறிப்பிடத்தக்க பாதிப்புக்களுடன் தொடர்புபட்ட புவியியல் ரீதியான அமைவிடத்தினை அடையாளப்படுத்தியுள்ளது, அத்துடன் இவ்வாறான பிரதேசங்களில் முரண்பாடுகளை இல்லாமலாக்கி சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான இடைத்தொடர்புப் பயிற்சிகளை நடாத்தியது. 2016 இல், பௌத்த, இஸ்லாமிய, இந்து மற்றும் கிறிஸ்தவ மதகுருக்கள், தொழில்வாண்மையாளர்கள், அபிப்பிராய தலைவர்கள் (Opinion leaders) மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 12000 இற்கும் மேற்பட்டவர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர்.

75. 2014 ஜுலை மாதம் அளுத்கமவில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக 200 இற்கும் மேற்பட்ட பொலிஸ் அறிக்கைகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளில் காணப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேக நபர்களுக்கெதிரான குற்றப்பத்திரிகை தயாரிக்கப்படும்.

***மொழிகள்***

**127 (2012) – 55 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்; மற்றும் 105 (2008) ஆம் பந்தியின் குறிப்பிடப்பட்டுள்ள தன்னார்வ உறுதி மொழிகள் 4.1 (2013) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகள்**

76. இலங்கை அரசாங்கமானது, இலங்கையில் அரச கரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவதனையும், மும்மொழி ஆற்றலுள்ள இலங்கை என்ற பத்து வருட தேசிய வேலைத்திட்டத்தினையும் முன்னுரிமைப்படுத்தியுள்ளது. இந்த கொள்கையினையும் திட்டத்தினையும் அமுல்படுத்துவதானது நாட்டில் நல்லிணக்கத்தை மேம்படுத்தவதற்கும்

பிரசைகளுக்கு அர்த்தபுஷ்டியான அரச சேவையினை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிப்பதற்கும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. 2016 இல் ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றும் நிலைபேறான சமாதானம் மற்றும் அபிவிருத்தியினையும் நெறிமுறை, கல்வி மற்றும் சக்தியளித்தல் (empowerment) ஆகிய மூன்று தூண்களின் ஊடாக சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் மற்றும் சமுக ஒருமைப்பாட்டுக்கான தேசிய சகவாழ்வு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

77. இந்த நிலையில், இலங்கை அரசாங்கம் மொழி உரிமைகள் தொடர்பான தனது இலக்கை அடைந்துகொள்வதற்காக பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. முதலாவதாக, வீதிக்கட்டமைப்பிலான மொழி வரைபடத்திற்கூடாக (Language Road Map) vi தேசிய இயலுமையை கட்டியெழுப்புவதை இலக்காக கொண்டுள்ளது. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட 4861 க்கும் மேற்பட்ட மொழி / சகவாழ்வு சங்கங்கள் சமுதாயத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. தற்போது 15000 கும் மேற்பட்ட நபர்களுக்கு அரச கரும மொழிகளை கற்றுக்கொடுப்பதற்காக 600 மேற்பட்ட மொழி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

78. இரண்டாவதாக, பொது மக்கள் பின்னூட்டல் மற்றும் கல்விக்காகவும் அரசாங்கம் தளங்களை உருவாக்கியுள்ளது. இது பொது மக்கள் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கான அழைப்பு மையமொன்;றைத் தாபித்துள்ளது. 2012 இல் அது தாபிக்கப்பட்டதிலிருந்து, மாதமொன்றுக்கு 100 தொடக்கம் 150 அழைப்புக்களை பெற்றுக்கொண்டுள்ளது. சிங்கள மற்றும் தமிழ் சமுகங்களிடையே காணப்படும் தொடர்பிடைவெளியினால் தோன்றிய பிரச்சினைகளை அறிவிப்பதற்காக www.bashawa.lk என்ற இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இணையத் தளம் இருமொழி அல்லது மும்மொழி மொழிபெயர்ப்பாளரின் சேவை தேவைப்படுகின்றவர்களை இலக்காக கொள்கின்றது.

79. மூன்றாவதாக, உள்ளுர் சேவை வழங்குவதை மேம்படுத்துவதற்காக, தெரிவு செய்யப்பட்ட மாநகர சபைகள், நகர சபைகள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொது வைத்தியசாலைகள் ஆகியவற்றில் காணப்படும் மாதிரி பக்கங்கள், அத்துடன் இரு மொழி மாவட்டங்கள் மற்றும் இரு மொழி பிரதேச செயலக பிரிவுகளில் 72 இரு மொழி கரும பீடங்கள் ஆகியன தாபிக்கப்பட்டுள்ளன. இந்தப் பக்கங்கள் ஏனைய இடங்களிலும் எதிரொலிக்கும். நாட்டிலுள்ள எல்லா பொலிஸ் நிலையங்களிலும் இருபத்து நான்கு மணி நேரமும் இரு மொழித் திறமையுள்ள அலுவலர் ஒருவரை கடமையில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

80. அரச கரும மொழிக்கொள்கையினை முறையாக அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, பொது மக்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் அவர்களின் சௌகரியத்திற்காகவும் நாட்டிலுள்ள சகல பொது மற்றும் பகுதியளவில் அரசுடமையான (Semi Government) நிறுவனங்கள், அதே போல பொது இடங்கள் ஆகியவற்றில் இரு மொழி, மும்மொழிகளிலான விளம்பர அட்டைகளை காட்சிப்படுத்துவதற்கு 2017 மார்ச் 09ம் திகதி அமைச்சரவை தீர்மானித்துள்ளது. சமீபத்திய அரசியலமைப்பு சீர்திருத்தம் இத்திட்டத்தின் அமுலாக்கத்தை பிரதிபலித்திருந்தன. உதாரணத்திற்கு, தேசிய மருந்தாக்கல் சட்ட அதிகாரசபையின் 120(5) மற்றும் 2015 இன் 5 ஆம் இலக்கம் வழங்கப்படுவதாவது:

"மருந்துகள், மருத்துவ கருவிகள் அல்லது எல்லை உற்பத்திகளை வாடிக்கையாளருக்கு வழங்கும் போது வாடிக்கையாளரினால் கோரப்படும் மொழியில் மருந்து, மருத்துவ கருவிகள் அல்லது எல்லை உற்பத்திகள் தொடர்பான விளக்கத்தை மருந்தாளர் வழங்குதல் வேண்டும்."

***பொருளாதார, சமுக மற்றும் கலாசார உரிமைகள்***

***சுகாதாரத்திற்கான உரிமை***

**95 (2008) பந்தியின் தன்னார்வ உறுதி மொழிகள்**

81. சுகாதார சேவையில் தொடர்ச்சியான முதலீட்டினை மேற்கொள்வதனூடாக வறுமையை இல்லாதொழிப்பதற்கும் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பணியாற்றும் நோக்கத்தில் இலங்கை தன்னார்வ உறுதிமொழியொன்றை பிரஸ்தாபித்துள்ளது. மூன்று வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு நோய் எதிர்ப்பு திறனை வழங்குவதில் 98.5 வீதத்தனை அடைந்துகொண்டதனால் இலங்கை உலகளாவிய சிறுவர் நோயெதிர்ப்புத் திறன் தொடர்பான அதன் இலக்குகளை அடைந்துள்ளதன் ஊடாக இந்த விடயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளது. 5 வயதுக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கான OPV/DT (தொண்டை கரப்பான் (ஏற்பு வலி), போலியோ ஆகியவற்றுக்கெதிரான நோய் எதிர்ப்புத் திறன்) வழங்குவதில் 86.6 வீதமான அடைவினைக் கண்டுள்ளது. அதேநேரம், 1996 இலிருந்து இலங்கையில் போலியோ நோயாளிகள் எவரும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 1991 இல் ஆயிரம் உயிர் பிறப்புகளுக்கு 22.2 ஆக காணப்பட்ட பிறப்பின்; போதான குழந்தை இறப்பு விகிதம் 2013ல் 6.5 ஆக குறைவடைந்துள்ளது.

82. 2013 இல் 99.8 வீதமான பிரசவங்கள் தேர்ச்சி பெற்ற பிரசவ பணியாளர்களால் (skilled birth attendants) பார்க்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அவசர மகப்பேற்று பராமரிப்பு தொடர்பான கணக்கெடுப்பு (2012 / 2013) இன் பிரகாரம் ஏறத்தாழ இலங்கையில் நிகழ்த்தப்படும் சகல பிரசவங்களும் பயிற்றப்பட்ட பராமரிப்புடன் கூடிய நிறுவன ரீதியான பிறப்புக்களாகவே அமைந்துள்ளதுடன் 70 வீதத்திற்கு மேற்பட்டவை சிறப்புப் பிரிவுகளில் இடம்பெறுகின்றன.

83. தேசிய சுகாதார பெருந்திட்டம் (2012 – 2017) ஆனது மனித வளங்களையும் நிதி வளத்தினையும் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் அதிகரிப்பதை முன்னுரிமைப்படுத்தியுள்ளது. இந்த திட்டம் 2017 அளவில் 3000 நபர்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பொதுச்சுகாதார மருத்துவ மாதர்களை (Public Health Midwives) அதிகரிப்பதற்கும் தொண்டைக்கரப்பான், குக்கல் மற்றும் ஏற்பு வலி (DPT3) ஆகியவற்றுக்கெதிரான தடுப்பூசி வழங்கும் அளவினை 2017 அளவில் 100 வீதமாக அதிகரிப்பதனையும் இலக்காக கொண்டுள்ளது.

***கல்விக்கான உரிமை***

**95 (2008) இல் விவரிக்கப்பட்டு தன்னார்வ உறுதி மொழிகள்**

84. இலங்கை கல்வியினூடாக வறுமையை இல்லாதொழித்தல் என்ற தன்னார்வ உறுதிமொழியை செய்துள்ளது. இந்த நிலையில், அரசு முதலாம் தரம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியினை வழங்குவதுடன் சமமானதும் சமத்துவமானதுமான கல்வியை பெற்றுக்கொள்வதனை உத்தரவாதம் செய்யும் நோக்கில் இன்னும் பல ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றது. இலங்கை 99.5 வீதம் என்ற உயர் தரமான ஆரம்ப கல்வி மட்டத்தினை கொண்டுள்ளது.

ஆரம்ப கல்விக்கு சேர்க்கப்படுகின்ற வீதம் 98.26 ஆகவும் ஆரம்ப கல்வியின் இடைவிலகல் வீதம் 0.23 ஆகவும் காணப்படுகின்றது. தரம் ஐந்தில் கல்வி கற்போரின் வீதம் தற்போது 98.5 ஆகவும் தரம் ஒன்பதில் கல்வி கற்போரின் வீதம் 97.8 ஆகவும் காணப்படுகின்றது. அதேவேளை, இரண்டாம் நிலை கல்வி கற்பதற்கான நுழைவு வீதம் 98.5 ஆகவும் இரண்டாம் நிலைக் கல்வியினை பூர்த்திசெய்வோரின் வீதம் 98.5 ஆகவும் காணப்படுகின்றது.

85. மாகாண கல்வி அதிகாரிகள் மற்றும் தேசிய மட்ட கல்வி முகவரகங்களின் ஆலோசனையுடன் 2012 – 2017 வரையான காலப்பகுதியை உள்ளடக்கி தற்போதைய கல்வித் திட்டத்தினை கல்வி அமைச்சு தயாரித்துள்ளது. இது தேசிய கல்விக் கொள்கைகள், சர்வதேச கடப்பாடுகள், கல்வி தொடர்பான அரசின் கொள்கைப் பிரகடனங்கள் மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளுடைய கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பரந்துபட்ட திட்டமொன்றாகும். அதேவேளை, கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவானது 2009 இல் அவுஸ்திரேலிய அரசாங்கம் மற்றும் யுனிசெப் ஆகியவற்றுடன் இணைந்து பிள்ளை நேய வழிகாட்டுதல்களை தயாரித்தது. பிள்ளை நேயப் பாடசாலை (Child-Friendly School Approach) நடைமுறையானது ஐந்து மாகாணங்களில் 1500 பாடசாலைகளில் பரீட்சிக்கப்பட்டு அதன் முக்கிய பண்புகள் தற்போது நாட்டிலுள்ள 9905 பாடசாலைகளின் கல்விக்கொள்கைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

86. இலங்கை அரசாங்கம் கல்வி முறைமைக்கிடையிலான பிள்ளைகளின் அனுபவத்தினை விருத்தி செய்தற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அது மாணவர்களுக்கு மதிய உணவுகளுடன் சீருடைகள் மற்றும் கற்றல் சாதனங்களையும் வழங்கியுள்ளது. அது மாத்திரமன்றி, சகல அரச பாடசாலைகளிலும் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை அமைக்குமாறு சுற்று நிருபமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

87. இதே வேளையில் அரசாங்கம் இலங்கையில் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க வேண்டியுள்ளதையும் அடையாளப்படுத்தியுள்ளது. அதற்கமைவாக, பல்வேறு மாகாணங்களுக்காக 2,631 தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**வீட்டுரிமை**

**127 (2012) - 88 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள சிபாரிசுகள்**

88. 2015 நவம்பரில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட தேவை மதிப்பீடானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 137,500 வீடுகள் என்ற பிரமாண்டமான தேவைப்பாட்டினை வெளிக்காட்டுகின்றது. இந்த மொத்த தேவைப்பாட்டில் 65000 வீடுகள் இலங்கை அரசாங்கத்தினால் சலுகை அடிப்படையிலான நிதி ஏற்பாட்டினை கொண்டு கட்டப்படவேண்டும் என்ற அமைச்சரவை தீர்மானங்களுடன் இருக்கின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் மீளத்திரும்பும் அகதிகள் ஆகியோருக்கு சமூக கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார பாதுகாப்பு ஆகியவற்றுடன் பொருத்தமானதும் மலிவானதுமான வீடமைப்புத் தீர்வனை வழங்கும். அவசரமான மற்றும் உடனடியான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் 8000 வீட்டுத் தொகுதிகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைப்பதற்கான நிதி இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளுக்கூடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பகுதியளவில் சேதமடைந்துள்ள 1000 வீடுகள் திருத்தம் செய்யப்படும்.

89. அதேநேரம், 46000 வீடுகளை அமைப்பதற்கான வீடமைப்புத்திட்டம் ஏற்கனவே இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அவ்வாறான 33,145 வீடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும், இடம்பெயர்ந்த மக்களுக்காக பாகிஸ்தான், கஸகிஸ்தான் மற்றும் பஹ்ரைன் ஆகிய அரசாங்கங்களின் நிதியுதவியுடன் 518 வீடுகள் மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் 3000 வீடுகளும் நிர்மானிக்கப்படவுள்ளன.

90. பெருந்தோட்டத்துறையில் வசித்துவரும் சுமார் 169,000 குடும்பங்களின் வீடமைப்பு மற்றும் வாழ்வியல் நிலமை தொடர்பாக பெருந்தோட்டத்துறை மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினூடாக பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சுக்களினால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டத்துறை சமுதாயத்தின் கௌரவத்தை மீளக்கொண்டு வருவதற்கும் அதனை முன்னேற்றுவதற்குமாக, நீர்வழங்கல், கழிவகற்றும் வசதிகள், போக்குவரத்து பாதைகள், மின்சாரம், சனசமூக நிலையங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்,கோயில்கள் மற்றும் ஏனைய பொது வசதிகள் ஆகியவற்றுடன் வட்டார அடிப்படையிலான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல் படுத்தப்பட்டுள்ளது.iii அதேவேளை, பதுளை, நுவரெலியா மற்றும் ஹட்டன் ஆகிய பிரதேசங்களில் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 4000 வீட்டுகளைக் கொண்ட திட்டத்தின் பணிகள் 2015 ஜனவரியில் ஆரம்பிக்க்பட்டது. இந்த திட்டம் 2017 இல் முடிவுறுத்தப்படவுள்ளது. பெருந்தோட்டத் துறையினரின் பொருளாதாரம், சமுக மற்றும் வாழ்வியல் நிலமைகளின் மேம்பாட்டுக்கான பெருந்தோட்டத்துறை சமுதாயத்தின் சமுக அபிவிருத்திக்கான தேசிய செயற்திட்டம் (2015 – 2025) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**வாழ்வாதாரமும் வறுமை ஒழிப்பும்**

**127 (2012) பந்தியின் - 58, 67, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109; 4.6, 4.16 (2013) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகள்**

91. வறுமை ஒழிப்புக்கு இலங்கை அரசாங்கம் அதிக முன்னுரிமை கொடுப்பதுடன், ஐக்கிய நாடுகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையான அபிவிருத்தி திட்டத்தின் முதன்மை நோக்கமாகவும் உள்ளது. சமூக பாதுகாப்பு, வருமான பகிர்விலுள்ள ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார மற்றும் சமூக எல்லை துறைகள் அத்துடன் மாகாண மற்றும் மாவட்டங்களில் நிலவும் அபிவிருத்தி ஏற்றத்தாழ்வு பிரிவுகள் மீது அரசின் புதிய பொருளாதார திட்ட நோக்குநிலை கவனம் செலுத்தி வருகிறது.

92. ஜனாதிபதி அவர்களின் முன்மொழிவுக்கமைய, 2016 ஒகஸ்ட் மாதம் வறுமையை ஒழிப்பதற்காக 2017 ஆம் ஆண்டினை 'வறுமை ஒழிப்பு' ஆண்டாக அரசு பிரகடனம் செய்திருந்தது. ஜனாதிபதி தலைமை தாங்குவதுடன், கௌரவ. பிரதம மந்திரி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் உள்ளடங்கலாக உயர் சக்திமிக்க குழு நியமிக்கப்பட்டமை தீர்மானிக்கப்பட்டது. அமைச்சர்க்ள, மாகாண சபைகள், சட்ட அதிகாரிகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் வறுமையை ஒழிப்பதற்கான தேசிய திட்டத்தை அமுலாக்கல் மற்றும் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையை வறுமையற்ற நாடாக உறுதிப்படுத்துவதே இந்த திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்காக உள்ளது. ஜனாதிபதியின் நேரடி தலைமையின் கீழுள்ள பணியகமானது

வறுமை ஒழிப்பு குறைப்புக்கான தனியார், அரச மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்புகாகவும், கிராமிய அபிவிருத்தி அணுகுமுறைக்கான சமூக இயக்க ஒத்துழைப்பு அமுலாக்கத்திற்காகவும் நிறுவப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டளவில் 15,000 கிராமிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் 2017 மே 04 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்ட "கிராம சக்தி மக்கள் இயக்கம்" திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தத்தமது உரிமைகள் மற்றும் கடமைகளை புரிந்துகொள்ள ஏதுவாக பொருளாதார மேம்பாடு கொண்ட குடிமக்களை உருவாக்குவதே இந்த இயக்கத்தின் நோக்கமாக உள்ளது.

93. திட்டமிடல் அமைச்சு மற்றும் ONUR ஆகியன இணைந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாவட்ட அபிவிருத்தி திட்டங்களை விருத்தி செய்துள்ளது. இந்த திட்டமானது மாவட்ட செயலாளர், அபிவிருத்தி முகவர்கள் மற்றும் சமூக தலைவர்களின் ஆலாசனையுடன் திட்ட வரைபுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வீதி,நீர்பாசனம், கிராமிய மருத்துவ நிலையங்கள், பாடசாலைகள், வீடு மற்றும் நீர்த்தொட்டி மீளமைப்பு போன்றவை மீதும் கவனம் செலுத்தப்படுகின்றன.

94. வறுமையை ஒழிக்கும் நோக்கில் பல்வேறு வாழ்வாதார திட்டங்கள் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழ் கிளிநொச்சியில் ஒன்றும், றுகுணு பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழ் ஹம்மாந்தோட்டையில் ஒன்றுமாக இரண்டு மாதிரிப் பண்ணைகள் சொட்டு நீர்;ப்பாசனத்தை பயன்படுத்தி உலர் நிலங்களில் மரக்கறி மற்றும் பழவகை பயிர்ச்செய்கை முறைகளை சுமார் 300 சிறு விவசாயிகளுக்கு கற்றுக்கொடுப்பதற்காக நிர்மானிக்கப்பட்டு வருகின்றன. இந்த முறைமை விவசாயிகளுக்கு நீர் மற்றும் உரத்தினை மீதப்படுத்தி அவர்களின் விளைச்சலையும் வருமானத்தையும் இரட்டிப்பாக்கக் கூடியதாகும்.

95. புனர்வாழ்வு அதிகார சபையானது சுய தொழில் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ள 6286 குடும்பங்களுக்கு வாழ்வாதார வழிமுறைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அது மாத்திரமன்றி, புனர் வாழ்வு அதிகார சபையானது 60,000 மேற்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈட்டினையும், 4000 குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான உதவிகளையும் மற்றும் மீள் குடியேற்றப் பிரதேசங்களில் உள்ள 500 மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடமைப்பு கடன்களையும் வழங்கியுள்ளது. 1V

96. இதேவேளை, சமுக மற்றும் பொருளாதார உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காக, இலங்கை அரசாங்கம், சமுக பொருளாதார நிலமைகள் தொடர்பான புள்ளி விபரங்களை தொடர்ச்சியாக சேகரித்து வருகின்றது. x

**வேலை செய்வதற்கும் வேலைத்தளத்தில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்குமான உரிமைகள்**

**4.19 (2013) பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள தன்னார்வ உறுதிமொழிகள்**

97. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பட்டையம் 155ற்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையிலானதும், வேலைத்தள சுகாதாரம் மற்றும் நலன்புரி வியடங்கள் தொடர்பான முன்னேற்பாடாக சட்டவாக்கம் மற்றும் நியதிக் கட்டுப்பாடுகளை அறிமுகம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் பொதுவாக 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க

தொழிற்சாலை சட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்திற்கு மேலதிகமாக, தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரமும் நலன்புரியும் தொடர்பான சட்டமொன்றின் வரைபு இடம் பெற்று வருவதுடன் அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

98. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய கொள்கைத் திட்டமொன்றை சுகாதார அமைச்சுடன் இணைந்து தொழில் அமைச்சு 2014 ஜுன் மாதத்தில் தயாரித்துள்ளது. இந்த கொள்கைத் திட்டம் விவசாயம், கைத்தொழில், கட்டுமானம், சுற்றுலாத்துறை மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட எல்லா துறைகளுக்கும் பொருந்துகின்றது. தேசிய தொழில் சார் பாதுகாப்பும் சுகாதார முறையும் மற்றும் வேலைச் சூழலை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை தாபிப்பதே இக் கொள்கைத் திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

99. அது மாத்திரமன்றி, தொழில் சார் பாதுகாப்பிற்கும் சுகாதாரத்திற்குமான தேசிய நிறுவகம் 2009 இல் தாபிக்கப்பட்டது. தொழிலாளர்கள், தொழில் கொள்வோர், தொழிற் சங்கங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அறிவூட்டுவதற்கும் பயிற்சி வழங்குவதற்குமான நிகழ்ச்சித்திட்டங்களை இந்த நிறுவகம் நடாத்துவதுடன் தொழில் தொடர்பான பாதிப்புக்கள் (காயங்கள்) மற்றும் நோய்களை குறைக்கின்றது.

### *C. குறித்துரைக்கப்பட்ட நபர்கள் அல்லது குழுக்களின் உரிமைகள்*

#### *பெண்கள்*

**127 (2012) பந்தியின் - 2, 61, 62, 63, 64, 65, 66, 68, 69, 128 (2012) பந்தியின் - 55;**

**98, 99 (2008) பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள தன்னார்வ உறுதி மொழிகள் ; 4.10, 4.11, 4.12 (2013) பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள தன்னார்வ உறுதி மொழிகள்**

100. பெண்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாப்பதற்கு சாத்தியமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. பெண்களின் உரிமைகளை மேம்படுத்தக்கூடிய முக்கிய சர்வதேச கருவிகளுக்கு அது அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. உதாரணமாக, 2015 ஜுன் 15ம் திகதி மறைத்து வைத்து தண்டித்தலும் கடத்திச் சென்று அடிமைப்படுத்தலையும், (விஷேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள்) தடுப்பதற்கான (Protocol to Prevent, Suppress and Punish Trafficking in Persons Especially Women and Children (Palermo Protocol) உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இலங்கை அரசாங்கம் 2016 பெப்ரவரியில் நீதி அமைச்சினால் ஆட்களை கடத்திச் சென்று அடிமைப்படுத்தலுக்கு எதிரான மூலோபாயத் திட்டத்தினையும் தயாரித்து சமர்ப்பித்தது.

101. மேலும், 2016 ஜனவரி 12 இல், இலங்கை அரசாங்கம், யுத்த சூழ்நிலையில் பாலியல் வன்முறை இடம்பெறுவதை இல்லாதொழிப்பதற்கான அர்ப்பணிப்பு தொடர்பான பிரகடனத்திற்கு ஒப்புதலளித்தது. அரசாங்கம் இதன் மூலம் சமாதானத்திற்கும், பாதுகாப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி ஆகியவற்றுக்கு குந்தகம் விளைவிக்கின்ற போர்கால பாலியல் வன்முறையினை தடைசெய்வதனை அங்கிகரித்துள்ளதுடன் அவ்வாறான குற்றங்களை புரிகின்றவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வதை தடுப்பதற்குமான தனது அர்ப்பணிப்பினை மீள வலியுறுத்தியுள்ளது.

102. இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட சகல பொலிஸ் நிலையங்களிலும் பெண் உத்தியோகத்தர்களை கொண்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பொலிஸ் உதவி மேசை பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர், பெண்கள் மற்றும் சிறுமிகள் மற்றும் அவர்களின் பெற்றோருக்கு துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்வதற்கு சாதகமானதும் பாதுகாப்பானதுமான சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென விஷேடமாக பயிற்றுவிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவ்வாறான உதவி மேசைகளில் பணியாற்றுகின்றனர். இந்த வலையமைப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடனும் தொடர்புறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, பால் நிலை அடிப்படையிலான உதவி மேசைகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வைத்தியசாலைகளிலும் தாபிக்கப்பட்டுள்ளன.

103. இரண்டாவதாக, இலங்கை பொலிஸின் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம் பால் நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக நாடு முழுவதிலுமிருந்து பெண்களிடமிருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காகவும் அத்தகைய முறைப்பாடுகளுக்கு உரிய பதிலை பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கும் வகையிலும் அவசர தொலைபேசி இலக்கமொன்றினை நடைமுறைப்படுத்துகின்றது.

104. மூன்றாவதாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை - குறிப்பாக வீட்டு வன்முறையை தடுப்பதற்காகவும் அவற்றுக்கு சிறந்த தீர்வினை வழங்குவதற்காகவும் பலவேறு துறையினரிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்கின்ற புதிய அணுகுமுறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சட்ட அமுலாக்கல் அதிகாரிகள், வைத்தியர்கள், சுகாதார பாராமரிப்பு தொழிலாளர்கள், ஊர்த் தலைவர்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோருடன் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு தீர்வு வழங்கும் பொறிமுறைகளை மீளாய்வு செய்வதற்கான கூட்டம் நடைபெற்றது.

105. நான்காவது, சட்டவாக்கம் மற்றும் கொள்கை வகுப்பு மட்டத்திலான நிபுணர் குழுவொன்றினால் 2005 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க வீட்டு வன்முறை தடுப்புச் சட்டத்திற்கு, அச்சட்டத்தினை வலுப்படுத்துவதற்காக திருத்தம் ஒன்று வரையப்பட்டுள்ளது. மேலும், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு இலங்கையின் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பாக முன்னிலை தேசிய செயற்திட்டமொன்றை அறிவித்துள்ளது. தேசிய மட்டத்திலான ஆலோசனைகளுக்கூடாக இத்திட்டம் தற்போது திருத்தப்பட்டுக்கொன்டிருக்கின்றது. அதேவேளை, பெண்கள் உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தக்கூடிய தேசிய பெண்கள் ஆணைக்குழுவினை தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

106. இந்த நடவடிக்கைகள் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுடன் தொடர்புடைய சம்பவங்களை விசாரிப்பதற்கும் வழக்குத்தாக்கல் செய்வதற்கும் வசதிகளை எற்படுத்தியுள்ளது. இலங்கை பொலிஸ், பால்நிலை வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி பின்னர் குற்றச்சாட்டுப் பத்திரத்தை தயாரிப்பதற்காக சான்றுகளை சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. 2015 ஒக்டோபர் 07ம் திகதி, யாழ்ப்பாண உயர் நீதிமன்றம் பெண்ணொருவரை கற்பழித்தமை தொடர்பாகவும் விஸ்வமடு என்ற இடத்தில் மற்றுமொரு பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தமை தொடர்பாகவும் நான்கு பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்களை குற்றவாளியாக கண்டுள்ளது. அதேவேளை வீட்டு வன்முறை தடுப்புச் சட்டம் வீட்டு வன்முறை தொடர்பான சம்பவங்களுக்கு பாதுகாப்புக்கட்டளைகளை வழங்கும் அமைப்பில் குவாசி நீதிமன்ற தீர்வுகளை வழங்குகின்றது.

பொலிஸ் பிரதானமாக வீட்டு வன்முறை தொடர்பான முறைப்பாடுகளை பெறுகின்றது. இவ்வாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பெண்கள் உரிமைகள் மற்றும் வீட்டு வன்முறை உள்ளடங்கலாக பாலியல் வன்முறைகள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளனர்.

107. பெண்கள் உரிமைகளை மேம்படுத்துவதற்கான ஏனைய நடவடிக்கைகள் முன்னாள் போராளிகளுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்குதல், நீதியை பெற்றுக்கொள்ள வசதியளித்தல் மற்றும் சட்ட மறுசீரமைப்பு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் பெண் போராளிகளை தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக மாற்றுவதற்காக விஷேடமான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னாள் பெண் போராளிகளுக்கு அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கின்றது. அதேநேரம், ஒவ்வொரு அமைச்சிலும் ஆளுகை மற்றும் கொள்கை வகுப்பு ஆகிய எல்லா மட்டங்களிலும் பால்நிலை பொறுப்புடமையினை உறுதிப்படுத்துவதற்கான பால்நிலை நோக்கு புள்ளிகள் தாபிக்கப்பட்டுள்ளன.

108. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்ட அமுலாக்கத்தில் பெண்களை ஈடுபடுத்துவதை வசதிப்படுத்துவதற்காக தமிழ் பேசும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உளவள ஆலோசனை, சட்ட உதவி மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடத்தினை வழங்குதல் போன்ற ஆலோசனை சேவைகள் வலுவூட்டப்பட்டுள்ளன.

109. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2017 - 2021 பெண்களுக்கெதிரான சகல வடிவங்களிலுமான பாரபட்சத்தினை இல்லாதொழிப்பதற்கான உடன்படிக்கையின் கீழ் (CEDAW) உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகளில் தாக்கம் செலுத்தும் விஷேட ஏற்பாடுகளை கொண்டுள்ளது. பெண்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக குற்றவியல் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டவாக்கங்களில் அவசர சட்டத் திருத்தங்களை ஏற்படுத்துமாறு இத்திட்டம் பரிந்துரை செய்கின்றது. உதாரணமாக, கர்ப்பிணிகளுக்கான மருத்துவ கால முடிவு, திருமணத்தின் பெயராலான கற்பழிப்பு, பாரபட்சமான தனியார் சட்டங்கள் மற்றும் வீட்டு வன்முறைகள் தொடர்பான சட்ட மறுசீரமைப்பு செயற்குறிப்புக்களை இது கொண்டுள்ளது.

110. மேலும், அரசியலில் பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்குரிய சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்சட்டம்) உள்ளூராட்சி மன்றங்களின் மொத்த ஆசனங்களில் 25 வீதமானவற்றை பெண் வேட்பாளர்களுக்காக ஒதுக்குகின்றது.

**சிறுவர்கள்**

**127 (2012) பந்தியின் - 70, 71, 72, 73; தன்னார்வ உறுதி மொழிகள் 97 (2008); தன்னார்வ உறுதிமொழிகள் 4.8, 4.13, 4.19 (2013)**

111. இலங்கை அரசாங்கம் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துதல் (குழந்தை தொழிலாளர்கள்) இல்லாதொழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களின் ஊழியச் சுரண்டல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களுக்கெதிரான வழக்குகளை துரிதப்படுத்தகின்றது.

112. இலங்கை அரசாங்கம் குழந்தைகள் வேலைக்கமர்த்தப்படுவதை இல்லாமலாக்குவதற்குரிய சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகள் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவது தடுக்கப்பட்ட 51 பாரதூரமான தொழில்கள் அல்லது வேலைச் சூழ்நிலைகளை உள்ளடக்குகின்றது. அது மாத்திரமன்றி, 14 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களை தொழிலுக்கமர்த்துவது சட்டப்பிரகாரம் தடுக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், இலங்கையில் சிறுவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுவதை இல்லாமலாக்குவதற்கான தேசிய கொள்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கிகாரத்தினை பெற்றுள்ளது. இந்த கொள்கைத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. 1939 ஆண்டின் 31ஆம் இலக்க கல்விச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கூடாக கல்வி கற்கவேண்டிய கட்டாய வயதெல்லை 14 வயதிலிருந்து 16 வயதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

113. சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதிலிருந்து சிறுவர் உரிமைகளின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டியது தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் உள்ள தொழிற் திணைக்களத்தின் பொறுப்புவாய்ந்த பணியாகும். இந்த திணைக்களம் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதன் மோசமான வடிவங்கள் மீதான பூச்சிய சகிப்புத்தன்மையினை (zero tolerance of the worst forms of child labour) வலியுறுத்துகின்றது. உதாரணமாக, குழந்தை தொழிலாளர்களற்ற வலயம் என்ற நிகழச்சித்திட்டத்தின் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தில் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் முற்றாக தடுக்கப்பட்டுள்ளது. இரத்திரபுரியில் பெற்றுக்கொண்ட அனுபவம் நாட்டின் 25 மாவட்டங்களிலும் அதேபோன்ற நிகழ்ச்சித்திட்டங்களில் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது.

114. 2015 இல் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழிநுட்ப மற்றும் நிதி உதவிகளுடன் நடாத்தப்பட்ட "சிறுவர்களை தொழிலுக்கமர்த்துவதை எதிர்ப்போம் தரமான கல்விக்கு ஆதரவளிப்போம் (No to Child Labour and Yes to Quality Education)" என்ற பிரச்சாரம் உள்ளிட்ட பிரச்சாரங்களினால் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த விடயத்தில் பொதுமக்கள் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களில் "பொது மக்கள் நடாமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் (public walking programmes)" ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கமைவாக, 2016 ஜூனில், அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கெதிரான தினம் கொண்டாடப்பட்ட போது "சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கெதிரான பூச்சிய சகிப்புத்தன்மை" என்ற உறுதிமொழியில் கைச்சாத்திட்டார்.

115. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியுடன், பூச்சிய சகிப்புத்தன்மை தொடர்பாக விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக நாட்டில் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துவது தொடர்பான பூச்சிய சகிப்புத்தன்மைக் கொள்கை (zero tolerance policy) தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. அதே போன்ற பயிற்சிப் பட்டறைகள் பெண்கள் மற்றும் மகளிர் விவகார பிரிவுக்குரிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் நடாத்தப்பட்டது.

116. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினாலும் மற்றும் தொழிற் திணைக்களத்தினால் நேரடியாகவும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்படும் முறைப்பாடுகள் திணைக்களத்தின் தொழிற் காரியாலயத்தினால் விசாரிக்கப்படுகின்றது. திணைக்களத்தின் இத்தகைய பணியானது நாட்டில் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப் படுவதில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் மதிப்பிடப்பட்ட சிறுவர்

சனத்தொகையில் (5 வயது தொடக்கம் 17 வயது) 1 வீதமான சிறுவர்கள் மாத்திரமே குழந்தைத் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அண்மைய புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

117. சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் ஊழியச் சுரண்டல் சம்மந்தமாக நடைமுறையிலுள்ள வழக்குகள் தொடர்பில் நிலவுகின்ற சவால்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் குறிப்பெடுத்துள்ளது. இலங்கையின் சட்டத்திற்கமைவாக, சிறுவர் சாட்சிகளின் பிரதான சாட்சியம் ஒளிப்பதிவு வடிவத்தில் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களாக முன்வைக்கப்படலாம். இவ்வாறு பொலிஸ் நிலையங்களும் நீதி மன்றங்களும் வீடியோ வசதிகளுடன் வசதிபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலுடன் தொடர்புடைய வழக்குகளை கையாள்வதற்கும் அவற்றை துரிதமாக முடிவுறுத்துவதற்குமாக அனுராதபுரத்தில் விஷேட உயர் நீதிமன்றமொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

118. மேலும், அரசாங்கம் சிறுவர் பாதுகாப்புக்கும் நீதிக்குமான மசோதாவினை இறுதிப்படுத்தும் நடைமுறையில் ஈடுபட்டு வருகின்றது. இந்த மசோதா 1939ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளையோர் சட்டத்தினை இரத்துச் செய்யும், அத்துடன் பிள்ளை நலச் சிறப்பு தொடர்பான இலங்கையின் சட்ட முறைமையினை சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடையதாக கொண்டு வருவதற்கு எதிர்பாரக்கின்றது. இந்த மசோதா முரன்பாட்டின் போது, பாதுகாப்பும் பராமரிப்பும் தேவையாகவுள்ள சிறுவர்களுக்கு சட்டத்துடனான விஷேடமான பாதுகாப்பு நடைமுறையினை அறிமுகம் செய்யும். ‘சிறுவர்களுக்கான வன்முறையினை முடிவுக்கு கொண்டுவருவதற்கான தேசிய பங்குடமை’ இனை 2017 ஜூன் 02ல் ஆரம்பிப்பதற்கு அமைச்சு நம்பிக்கை கொண்டுள்ளது. சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான உலகளாவிய பங்குடமைக்கான (Global Partnership to End Violence Against Children) புதிய மார்க்கங்களை அறிமுகம் செய்யும் பன்னிரெண்டு நாடுகளில் ஒரு நாடாக இலங்கை தனது தன்னார்வ அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியுள்ளது. புதிய மார்க்கங்களை அறிமுகம் செய்கின்ற ஒரு நாடென்ற வகையில் இலங்கை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2030 நிகழ்ச்சி நிரலுக்கு சமாந்தரமாக சகல சிறுவர்களும் வன்முறை மற்றும் சுரண்டல்களிலிருந்து விடுபட்டு வளர்தல் என்ற உலகின் தூரநோக்கிற்கு சக்தியளிக்கும் வகையில் புதிய மூலோபாயமொன்றை அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளது.

***மாற்றுத் திறனாளிகள்***

**127 (2012) பந்தியின் - 1இ 90; *தன்னார்வ உறுதி மொழிகள் பந்தி* 111 (2008); *தன்னார்வ உறுதி மொழிகள் பந்தி* 4.15 (2013)**

119. 2016 பெப்ரவரியில் இலங்கை மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான பட்டையத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கான சட்டவாக்கம் வரைபுக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் அது 2017 செப்டெம்பர் இறுதியளவில் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும்.

120. சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு, தொழில் மற்றும தொழில் உறவுகள் அமைச்சு, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு மற்றும் சமுக சேவைகள் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு அரச முகவர்கள் மாற்றுத் திறனாளிகள் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான விஷேட ஏற்பாடுகளை செய்துள்ளது.

121. 1988 ஆகஸ்ட் 18ம் திகதி 27/88 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை, மாற்றுத் திறனாளிகள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு சாதகமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. அதற்கமைவாக பொது நிர்வாக அமைச்சானது சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றுக்கு, நிலவுகின்ற மொத்த ஆளணி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பின் போது ஆகக் குறைந்தது 3 வீதமான ஆட்சேர்ப்பினையாவது அடிப்டை தகைமைகளின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கின்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கவேண்டும் என்றும் அவர்களது உடல் ரீதியான இயலாமை அவர்களின் கடமையிலீடுபடுவதற்கு ஒரு தடையல்ல என்றும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

122. மாற்றுத் திறனாளிகள் கல்வி, தொழிற் பயிற்சி, தொழில்வாய்ப்பு மற்றும் அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு பல்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்வதாக,தேசிய மனித வள மற்றும் தொழில் வாய்ப்புக் கொள்கை – 2012 தெரிவிக்கின்றது. இந்த கொள்கை, மாற்றுத் திறனாளிகள் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள உதவும் வகையிலான குறிப்பிடத்தக்க செயற்திட்டங்களை வழங்குகின்றது. உதாரணமாக, மாற்றுத் திறனாளிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக தொழில் வழங்குனர்களுக்கு பௌதீக வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் ஊக்குவிப்புக்களையும் வழங்குதல்.

123. சமுக சேவைகள் திணைக்களம் மாற்றுத் திறனாளிகளுக்காக விஷேடமாக வடிமைக்கப்பட்ட பயிற்சி நிலையங்களுக்கூடாக இலவசமான தொழிற்பயிற்சிகளை வழங்குகின்றது. வெற்றிகரமாக பயிற்சியை முடிக்கும் பயிற்சியாளர் அவர் பயிற்சியளிக்கப்பட்ட துறையில் சுயமாக தொழிலை தொடங்குவதற்கான உபகரண பொதியினை இலவசமாக பெற்றுக்கொள்வார். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தினால் அவர்களுக்கு சுயதொழில் உதவிகளும் வழங்கப்படுகின்றன. குறைந்த வருமானம் பெறும் மாற்றுத் திறனாளிக்கு அவர் புதிய சுய தொழிலொன்றை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவே உள்ள சுய தொழிலை விருத்தியடையச் செய்வதற்காக ரூபா 25,000 வரையான அளிப்புத் தொகையொன்று வழங்கப்படும்.

124. தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினால் சாதகமான தொழில் வழங்குனர்களுடன் மாற்றுத் திறனாளிகளை தொடர்புறுத்துவதில் அவர்களுக்கு உதவுவதற்காக தொழில் வாய்ப்பு தொடர்பான தரவுத்தளமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. எந்தவொரு மாற்றுத் திறனாளிக்கும் www.employmentforpwds.org என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து தொழில் வாய்ப்பொன்றுக்காக விண்ணப்பமொன்றை பதிவுசெய்ய முடியும்.

125. 2006 அக்டோபரில் வெளியிடப்பட்ட 2006 ஆம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகள் (அணுகிச் செல்லல்) சட்ட கட்டுப்பாடுகள், சகல பொதுக் கட்டிடங்கள், பொது இடங்கள், பொதுச் சேவைகள் வழங்கப்படும் இடங்கள் ஆகியவற்றில் இலகுவாக உள்நுளைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகள்**

**127 (2012) பந்தியின் - 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99;**

***தன்னார்வ உறுதி மொழிகள் 106, 107 (2008);***

***தன்னார்வ உறுதி மொழிகள் 4.4 (2013)***

126. 2016 இறுதியில், இலங்கை அரசாங்கம் 253,231 குடும்பங்களை சேர்ந்த 882,392 நபர்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தியது. தற்போதும் 35 நலன்புரிமுகாம்களில் 1,608 குடும்பங்களை சேர்ந்த 5,732 நபர்கள் வடமாகாணத்தில் இருக்கின்றனர். மேலுமொரு 172 குடும்பங்களைச் சேர்ந்த 486 நபர்கள் கிழக்கு மாகாணத்தில் இன்னும் நலன் புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். மேலும், சுமார் 11,073 குடும்பங்கள் வட மாகாணத்திலும் 1,498 குடும்பங்கள் கிழக்கு மாகாணத்திலும் உறவினர் வீடுகளில் வாழ்ந்து வருவதால் அவர்கள் இன்னும் இடம் பெயர்ந்தே உள்ளனர். அதேநேரம், 4,870 அகதிகள் பிரதானமாக இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளனர். இன்னும் 102,000 அகதிகள் நாட்டுக்கு வெளியிலேயே இருக்கின்றனர்.

127. நீண்ட காலமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்தோர் எதிர்கொள்ளும் மிகவும் சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளுள் ஒன்று அவர்களது காணிக்கான உறுதிப்பத்திரத்தை தொலைத்திருப்பதாகும். இரண்டாவதாக, குடியிருப்பாளர்கள் ஆட்சி அதிகாரம் செலுத்துதல். அதாவது, இடம் பெயர்ந்த ஒருவருடைய காணியை அடாத்தாக பிடித்து வாழ்ந்துவந்த ஒருவர் பத்து வருடங்களுக்கு மேலதிகமாக அந்தக் காணியில் தடை பிசகற்ற ஆட்சியை நடாத்தியிருத்தல். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க ஆட்சியுரித்து (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு தங்களது காணியினை உரமையயினை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளிக்கின்றது. அதேநேரம், 2003ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க மத்தியஸ்த்தம் (விஷேட பிரிவுகளிலான சர்ச்சைகள்) சட்டத்தின் கீழ் காணி தொடர்பான சர்ச்சைகளை தீர்த்துக்கொள்ள வசதியளிக்கும் வகையில் சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் விஷேட மத்தியஸ்த சபைகள் காணி தொடர்பான சர்ச்சைகளுக்கு மத்திஸ்தம் வகிப்பதற்காக வர்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

128. சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துக் கலாசார அமைச்சு யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த காரணத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீடித்த தீர்வினை வழங்குவதற்கான கொள்கைத் திட்டமொன்றை வகுத்துள்ளது. அந்த கொள்கைத்திட்டம் அமைச்சரவை அங்கிகராத்தினை பெற்றுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துவது மற்றும் அவரகளின் உடனடி, இடைக்கால மற்றும் நீண்டகால பாதுகாப்பினையும் தேவைப்படும் உதவிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தவதனையும் அவர்களின் இடப்பெயர்வுக்கு நீண்ட கால தீர்வொன்றுக்காக வசதிப்படுத்துவதையும் இலக்காக கொண்டுள்ளது. xi (அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அனர்த்தம் தொடர்பாக பெறப்பட்ட தகவல்களையும் உள்ளடக்கல்)

***முன்னாள் போராளிகள்***

**127 (2012) பந்தியின் - 48, 49, 50;**

***தன்னார்வ உறுதி மொழிகள் - பந்தி 4.5 (2013)***

129. 2009 மே மாதத்தில் யுத்தம் முடிவுற்ற தறுவாயில் 594 சிறுவர் போராளிகள் உள்ளடங்கலாக 12,156 முன்னாள் போராளிகள் பாதுகாப்புப் படையினரிடம் சரனடைந்தனர். அவர்களுக்கு மீள் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு வருட புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். புணர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள்

மற்றும் சிறுவர் போராளிகள் மீண்டும் சமுகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டனர். புனர் வாழ்வளிப்பதற்கான மூலோபாயம் மற்றும் செயற்பாடுகள் அனைத்தும் மேசன், தச்சுத் தொழில் மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகியன உள்ளிட்ட தொழில் மற்றும் தொழிநுட்ப பயிற்சி என ஆறு மாத பயிற்சியினைத் தொடர்ந்து ஆண்மீக வழிமுறை, சமுக உளவியல், ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவ பயிற்சி ஆகியவற்றின் உடாக அவர்களின் உடல் மற்றும் உள விருத்தியினை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.

130. இலங்கையின் புனர்வாழ்வு அதிகார சபை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தினால் 2012, 2013ஆம் ஆண்டுகளில் புனர்வாழ்வளிக்கப்பட்டிருந்த 1,799 முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் கடன்களை வழங்கியுள்ளது. இந்நோக்கத்திற்காக 302 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

131. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்திற்கு தோற்றிய 361 முன்னாள் போராளிகளில் 212 பேர் சித்தியடைந்தனர். இதில் 65 பரீட்சார்த்திகள் பெண் முன்னாள் போராளிகளாவர். இவர்களில் 37 முன்னாள் போராளிகள் 2010ல் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்ததை தொடர்ந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். இதில் 29 பரீட்சார்த்திகள் முன்னாள் பெண் பேராளிகளாவர். பெண் மற்றும் சிறுவர் முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாக முன்னாள் போராளிகளை சமுகத்துடன் மீளவும் இணைக்கும் பணிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காட்டியுள்ளது. இன்னும் மொத்தமாக 6 முன்னாள் போராளிகள் புனர் வாழ்வளிக்கப்பட வேண்டியுள்ளதுடன் 2017 டிசம்பரில் அவர்களுக்கான புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நிறைவு பெற்றதும் அவர்கள் விடுவிக்கப்பட்டு சமுகத்துடன் மீளவும் இணைக்கப்படுவர். மேலுமுள்ள புனர்வாழ்வளிக்கும் சம்பவங்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள தெரிவுகளின் கீழ் தாமாகவே புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உள்ளாகி வழக்கு தொடரப்படுவதிலிருந்து விடுபட முடியும்.

## *V.* சர்வதேச சமுகங்களின் அதிகரித்து வரும் பிரச்சினைகள் மற்றும் உதவிகள்

### அதிகரித்துவரும் பிரச்சினைகள்

132. 2012ல் இடம்பெற்ற இலங்கையின் இரண்டாவது கால மீளாய்வு சுற்றினை தொடர்ந்து மனித உரிமைகளுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கின. முதலாவதாக, நிலைபோறான அபிவிருத்தி இலக்குகளின் உச்சத்தை எட்டிய உலகளாவிய நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரல் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்தி பாதுகாப்பது தொடர்பான கொள்கைகளை மேலும் கூர்மைப்படுத்தியது. குறிப்பாக நிலைபேறான அபிவிருத்திக்காக மேம்பட்ட அமைதியான மற்றும் உள்வாங்கக் கூடிய சமுகங்களை இலக்காகக் கொண்டதும் சகல மட்டங்களிலும் செயற்திறனானதும் பெறுப்புக் கூறத்தக்கதும் மற்றும் உள்வாங்கத்தக்க நிறுவனங்களை இலக்காக கொண்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 16 இதனுடன் தொடர்புடையது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் விஷேடமாக மனித உரிமைகளுடன் தொடர்புடைய விடயங்களை இலக்காக கொண்டுள்ளது: அவை பின்வருமாறு,

*a.* தேசிய சட்டவாக்கம் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு ஏற்புடையவாறு பொதுமக்கள் தகவல்களை பெற்றுக்கொள்வதையும் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல். அத்துடன்,

*b*. தொடர்புடைய தேசிய நிறுவனங்களை வலுப்படுத்துதல், சகல மட்டங்களிலும் இயலளவைக் கட்டியெழுப்புவதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உட்பட சர்வதேச உடன்பாடுகளை உள்வாங்குதல் மற்றும் வன்முறைகள் பயங்கரவாதம் மற்றும் குற்றங்களை இல்லாதொழித்தல்.

133. நிலைபேறான அபிவிருத்தி மீதான தேசிய கொள்கை அமுலாக்கத்தை விருத்தி செய்தல் மற்றும் *17* நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் பின்தொடர்தல் மற்றும் முன்னேற்றங்களை கண்காணிக்க சகல பொறுப்புமிக்க முகவர்களுக்கும் வசதியேற்படுத்தல் அத்துடன் *2015* ஐக்கிய நாடுகளினால் பின்பற்றப்படும் தொடர்புடைய *166* இலக்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில்; குறிப்பிடத்தக்க அபிவிருத்தி திட்டத்தை உருவாக்குதல் எனும் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் எடுத்தது. மேலும், நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான மூலோபாயங்கள் மற்றும் தேசிய கொள்கைத் திட்டங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கான சட்ட மசோதாவிற்கு 2016 ஜுலை மாதம் அமைச்சரவை அனுமதி வழங்கியது. இது பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

134. இரண்டாவதாக, இலங்கையில் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு தொடர்பான பிரச்சினைகள் 2012 இலிருந்து தொடர்கின்றது. தற்போதைய அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான நிகழ்ச்சி நிரலானது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை மீளமைப்பதற்கும், அதிகார பரவலாக்கத்தின் ஊடாக அர்த்தமுள்ள அதிகார பகிர்வொன்றினை வழங்குதல் மற்றும் விகிதாசார தேர்தல் முறையிலிருந்து கலப்பு தேர்தல் முறையொன்றை நோக்கி நகரும் வகையில் தேர்தல் முறையினை திருத்தம் செய்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்குகின்றது. இந்த மீளமைப்பு ஜனநாயக பொறுப்புக்கூறலை முன்னேற்றுதல், சுயாட்சிப் பண்புகளை மேம்படுத்தல் மற்றும் வாக்குரிமையை மேம்படுத்தல் ஆகியவற்றை இலக்காக கொண்டுள்ளது. இந்த முன்னுரிமைகள் தற்போது தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2017 – 2021ல் பிரதிபலிக்கின்றன.

135. மூன்றாவதாக, கால நிலை மாற்றம் மற்றும் மனித உரிமைகளுக்கு அதனுடன் காணப்படும் தொடர்பு ஆகியன இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய முன்னுரிமையை ஏற்படுத்துகின்றது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 71வது அமர்வில் சுற்றாடல் மேம்பாட்டின் முக்கியத்துவத்தினை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கோடிட்டு காண்டினார். இவ்வாறு இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு சார் விடயங்களை அதன் சுற்றாடல் கொள்கைகள் மற்றும் அனர்த்த நிவாரண மூலோபாயங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதில் அர்ப்பணிப்பினை வெளிக்காட்டுகின்றது.

136. இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத்தீர்மானத்துக்கூடாக இலங்கை அரசாங்கம் திறந்த அரசாங்க பங்குடமையுடன் 2015 இணைந்து கொண்டதுடன் ஜனநாயகம், ஆளுகை, வெளிப்படைத்தன்மை, சட்ட ஆட்சி மற்றும் ஊழலுக்கெதிரான நடவடிக்கை ஆகியவற்றை இலக்காக கொண்டு தேசிய செயற்திட்டமொன்றை நிறைவேற்றியது.

**ஐக்கிய நாடுகளின் கூட்டுறவு மற்றும் உதவிகள்**

**127 (2012) பந்தியின் - 43, 44, 47மற்றும் 128 (2012) பந்தியின் 43, 44, 45, 46, 47, 48, 50, 51, 52; தன்னார்வ உறுதிமொழிகள் 88 (2008): 4.7 (2013**

137. இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச சமுகத்திடமிருந்து மிகவும் முனைப்பாக உதவிகளை பெற்றுக்கொண்டது. 2015 நவம்பரில், இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் அமைதியை கட்டியெழுப்பும் நிதியத்தின் நீண்ட காலத்திற்கு சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மீளப்பெற்றுக்கொள்ளும் வசதிகளுக்கான நிதி உதிவிகளை பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெற்றுள்ளது. அரசாங்கமும் ஐ.நா வும் இணைந்து சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான முன்னுரிமை வேலைத்திட்டத்தினை நோக்கி முன்னேறிச் செல்கின்றது.

138. இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் நிறுவகங்களுக்கும் இடையிலான கூட்டுறவு நடைமுறைகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் 30/1 மற்றும் 34/1 ஆகியவற்றின் இணை அனுசரணை வரலாற்றுக்கு அப்பால் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடும் கடப்பாட்டை எட்டியுள்ளது, xii அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் மற்றும் ஐக்கிய நாடுகள் விஷேட நடைமுறைகள் ஆகியவற்றுடன் இணங்கியுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் *2015* பெப்ரவரி *6* முதல் *9* ஆம் திகதி வரையான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் செய்ட் ரா அட் ஹ{சைன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். சுயாதீன நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் மீதான உண்மை, நியாயம், மறுதலிப்பு மற்றும் மீளநிகழாமைக்கான உத்தரவாதம் மற்றும் சித்திரவதை மற்றும் ஏனைய குரூரங்கள், மனிதாபிமானமற்ற அல்லது இழிவான மற்றும் தண்டனைகள், செயல்படுத்தல் அல்லது தன்னிச்சையற்ற காணாமல்போதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக்குழு ஆகியோர் கடந்த இரு வருடங்களில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். இதற்கிடையே, *2015* டிசம்பர் *17* ஆம் திகதி அனைத்து விசேட நடைமுறை ஆணை வைத்திருப்போருக்கும் திறந்த அழைப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.